விளம்பர விகிதங்களுக்கு:
மனேஜர்,
சத்தியவேத பாதுகாவலன்
பெரியதெரு,
யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு எழுதுக

# சத்தியவேத பாதுகாவலன்

சந்தா விபரம்
வருடசந்தா
இலங்கை ரூபா 5-50
வெளிநாடுகள் „ 6-50

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA.
1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.
Telephone: No. 300
"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

85-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1960-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 6-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 39-ம் இலக்கம்

### கொழும்பு, சஞ்சூசையப்பர் கல்லூரி மைதானத்திலே தமக்கு அருளப்பெற்ற வரவேற்பு உபசாரத்தின்போது

## கருதினால் ஆண்டகையவர்கள் நிகழ்த்திய உரை

நேற்றுக்காலை நாம் இலங்கைவந்து சேர்ந்ததுமுதல் நமக்குண்டான சந்தோஷத்தைச் சொற்களால் எடுத்துச் சொல்லவியலாது. விமானநிலையத்திலே உற்சாகமிக்க உங்கள்வரவேற்பும், உங்கள்நகரினூடாகச் சென்றவழிநீளம் நாம்கண்ணுற்ற உங்களது வேத விசுவாசத்தின் பிரமிக்கத்தகும் வெளியரங்ககாட்சியும் இங்கே கத்தோலிக்க வாழ்க்கையின் வளத்துக்கும், உங்கள்மேல் தேவன்பொழிந்துள்ள பன்மடங்கான ஆசீர்வாதங்களுக்கும் உற்சாகமூட்டும் சான்றுகளை நமக்குஅருளலாயின. அத்துணை அநேகமான உங்கள்பிள்ளைகளின் சந்தோஷம் விளைக்கும் சமுகத்தாலே நாம்பெரிதும் மனவருட்சிகொள்ளலானோம். இந்தஇளம்ஆத்துமங்கள் இனிவருங் காலத்திலே திருச்சபையும், நாடுமாகிய இரண்டிற்குமே நன்மைபயப்பதாகிய முக்கியமானவாழ்க்கைக்குப் பயிற்றப்பட்டு வருகிறார்கள். இந்த இளைஞர்களின் கல்விக்கென்று தங்களை அர்ப்பணஞ்செய்திருக்கின்ற பக்திபற்றுதலுள்ள சந்நியாசர், கன்னியாஸ்திரிமாரும், ஆசிரியர்களும் வருங் காலத்திற்கென்று தாங்கள் பயிற்சியளித்துவருகின்ற இந்தஇளஞ்சிறார்களையிட்டு உள்ளபடியே பெருமையடைய வேண்டும். எதிர்காலச்சிறப்பின் நம்பிக்கைக்குரிய இச்சிறுவர், இச்சிறுமிகளின் பெற்றோரும் தங்களைப் பொறுத்தமட்டிலே தங்கள்வருங் காலசந்ததியார் நல்லபிரசைகளைக் குறிப்பதாகிய கடவுள்பற்றிலும், தேசபற்றிலும் வளர்ந்துகொண்டு வருவதைக்கண்டு சந்தோஷமடைய வேண்டும்.

நித்தியநகராகிய ரோமாபுரியை விட்டு நாம்புறப்படுமுன் நமதுபரிசுத்த பிதாவாகிய 23-ம்அருளப்பபாப்பரசர் இலங்கையிலுள்ள தமதுபிரிய பிள்ளைகள்மட்டில் தாம் பிதாவுக்குரிய கரிசனை கொண்டிருப்பதாகவும், அவர்களுக்குத் தமதுஅப்போஸ்தலிக்க ஆசீர்வாதம் அருளுவதாகவும் தெரிவிக்குமாறு விசேஷஅதிகாரங் கொடுத்து நம்மைஅனுப்பலாயினர். நாம் திரும்பஅங்குசெல்லும்போது உங்கள் விசுவாசபலத்தைப்பற்றியும், உங்கள்குருமார், மேற்றிராணிமார்கள் மட்டிலே நீங்கள்கொண்டுள்ள பக்திபற்றுதலைப்பற்றியும், அழகும்,செழுமையும்வாய்ந்த இத்துவீபத்தில் எழுப்பப்படுவதற்கு நீங்கள்ஏதுவாயிருந்த கவர்ச்சிகரமான சமயஸ்தாபனங்களைப் பற்றியும் நாம் அவருக்கு எடுத்துச் சொல்வோம். இலங்கையிலுள்ள தமதுகத்தோலிக்கமக்கள் இந்தநாட்டிலே திருச்சபையின் எதிர்காலச்சிறப்பிற்காகத் தேவவரப்பிரசாதங்களின் உதவியைக்கொண்டு தொடர்ந்து ஒத்துழைத்து வருகிறார்களென்று அறியவரும்போது உங்கள் எல்லோர் மட்டிலும் பிதாவுக்குரியபட்சம் நிறைந்த அவருடைய அன்பான இருதயம் மகிழ்ச்சியடையுமென்பதை நாம்அறிவோம்.



விசுவாசப்பரப்புதல் திருச்சங்க அதிபரான கருதினால் அகஜியானியன் ஆண்டகை

உங்கள்துவீபத்திற்கு நம்முடைய முதற்தரிசனை இதுவாகும். இதன் வனப்பையிட்டும், ஏறக்குறைய ஒவ்வொருதுறையிலுமே நாம்கண்ட இதன்அபிவிருத்தியையிட்டும் நமக்குண்டானவியப்பை இந்தவேளை நாம் தெரிவியாமல் விடலாகாது. நீங்கள் சுதந்திரமடைந்து ஒருசிலவருடங்கள் மாத்திரமே. அதற்கிடையில் ஏற்கனவே இங்கு அநேககாரியங்களைச் சாதித்திருக்கிறீர்கள். இவைகள் உங்களுடையமக்களின் விடாமுயற்சிக்கும், சாதனைக்கும் சான்றுபகர்கின்றன. உலகஇராச்சியங்கள்மத்தியில் தனதுஸ்தானத்தை வகித்திருக்கின்ற ஒரு புதியநாட்டை எழுப்புவதாகிய இந்தப் பணியிலே இலங்கைக் கத்தோலிக்க மக்கள் தங்கள் பங்குத்தானத்தை வழங்கியிருக்கின்றார்கள். அஃது பெரியதொன்றாகும். தங்கள்தாய்நாட்டிற்கு அவர்கள் சேவையளிக்கும் போது தங்களது திருச்சபையின் கட்டளைகளுக்கு அதிகம்பிரமாணிக்கமாய் இருந்துவருகின்றார்கள்.

ஏனெனில், ஒருஉத்தம கத்தோலிக்கனாயிருப்பதானது எப்போதும் ஒரு உத்தமபிரசையாய் இருப்பதாகும். ஒருநாட்டுமக்களின் ஆத்மீகவாழ்க்கையானது அதன்பிரசைகளைப் புண்ணிய வாழ்க்கைக்குஎன்றைக்கும்தூண்டிவிட வேண்டும். இவ்விதம் ஆத்மீகபலத்தின்மூலம் ஒருநாட்டின் பொதுசன வாழ்க்கைக்குப் பலமளிக்கவேண்டும்.

நாட்டின் பெருங்குடிமக்களில் பல்வேறுபிரிவினராயுள்ள எல்லோரையுமே ஒன்றுசேர்ந்துழைக்குமாறு ஒரு புதியநாடு ஒருவிசேஷவகையில்வேண்டுகின்றது. அதனால் ஒருபொதுஒத்துழைப்புப்போக்கில் தங்கள் தாய்நாட்டுக்கு அவர்கள் சேவைசெய்யக் கூடியோராகின்றார்கள். சுதந்திரத்தையும், சந்தர்ப்பத்தையும் தொடர்ந்து கொண்டுசெல்வதில் சகலவிதமான கொள்கைகளையுமுடைய பிரசைகள் அனைவருமே சந்தோஷமாக ஒன்றுசேர்ந்துகொள்ளவேண்டும். இஃதின்றேல் ஜனநாயக வாழ்க்கை என்பது அர்த்தமற்றதாகும். இது ஒருபிரசைக்கும், மற்றொரு பிரசைக்குமிடையே வேற்றுமை இருக்கப்படாதென்று கருதுவதல்ல. ஆனால், தங்கள் நாட்டுப்பற்றிலே எல்லாப்பிரசைகளையும் ஒருங்கேபந்திக்கும் காரியங்கள்

[தொடர்ச்சி 8-பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1959-ம் ஆண்டு கார்த்திகைமாதம் யாழ்ப்பாண மேற்றிராசனப் பாடசாலைகளில் நடந்த ஞானோபதேசப் போட்டிப் பரீட்சையின்

# பேறுகள்

### 4-ம் வகுப்பு

**இல்லறத்தார் நடாத்தும் பாடசாலைகள்**

**1-ம் இடம்**
வெற்றிலைக்கேணி ரோ. க. பாடசாலை
பா. பிலோமினு

**2-ம் இடம்**
பரித்தித்துறை சென்தோமஸ் பாட.
றெ. ஜலின் றூபி

**3-ம் இடம்**
பெரியவிளான் ரோ. க. பாடசாலை
யோ. ஜெயமேரி

**4-ம் இடம்**
முள்ளிக்குளம் ரோ. க. பாடசாலை
ச. நீக்கிலாஸ் குரூஸ்

**துறவறத்தார் நடாத்தும் பாடசாலைகள்**

**1-ம் இடம்**
மாதகல் சென்தோமஸ் ரோ. க. பெண்பாட.
ம. மேரி பற்றிமா

**2-ம் இடம்**
சில்லாலை ரோ க. பெண்பாடசாலை
ச. பற்றிமா இராசேஸ் லில்லி

**3-ம் இடம்**
முல்லைத்தீவு ரோ. க. பெண்பாடசாலை
ம. மரியநாயகி

**4-ம் இடம்**
கிளிநொச்சி பற்றிமா ரோ. க. பெண்பாட.
ம. மாசலீன்

### 5-ம் வகுப்பு

**இல்லறத்தார் நடாத்தும் பாடசாலைகள்**

**1-ம் இடம்**
மணற்காடு ரோ. க. பாடசாலை
ம. மேரி பற்றிமா

**2-ம் இடம்**
வலைப்பாடு ரோ. க. பாடசாலை
செ. மெல்கியாகப்பர்

**3-ம் இடம்**
புங்குடுதீவு ரோ. க. பாடசாலை
ம. மதுரநாயகம்

**4-ம் இடம்**
சுருவில் ரோ. க. பாடசாலை
ஞா. பிரான்சிஸ் அலோசியஸ்

**துறவறத்தார் நடாத்தும் பாடசாலைகள்**

**1-ம் இடம்**
கிளிநொச்சி பற்றிமா ரோ. க. பெ. பா.
ஞா. திரேசம்மா

**2-ம் இடம்**
கிளிநொச்சி பற்றிமா ரோ. க. பெ. பா.
எ. ஆன் றீற்ரு

**3-ம் இடம்**
முல்லைத்தீவு ரோ. க. பெ. பாடசாலை
இ. திரேசம்மா

**4-ம் இடம்**
மாதகல் சென்தோமஸ் ரோ. க. பெ. பா.
சி. இசபெல்லா கருணை

### 6-ம் வகுப்பு

**இல்லறத்தார் நடாத்தும் பாடசாலைகள்**

**1-ம் இடம்**
முல்லைத்தீவு ரோ. க. ஆண்பாடசாலை
சூ. அல்விறெட் ஞானராசா

**2-ம் இடம்**
ஒலுக்குளம் ரோ. க. பாடசாலை
சூ. தேவரத்தினம்

**3-ம் இடம்**
வலைப்பாடு ரோ. க. பாடசாலை
சூ. பவுலீனப்பு

**4-ம் இடம்**
முருங்கன் ரோ. க. பாடசாலை
யோ. மரியராணி

**துறவறத்தார் நடாத்தும் பாடசாலைகள்**

**1-ம் இடம்**
நாரந்தனை ரோ. க. பெண்பாடசாலை
ஜே. மேரி அன்சில்லா

**2-ம் இடம்**
பரித்தித்துறை சென்தோமஸ் ரோ. க. பெ. பா.
ஆ. விற்றுவாரா

**3-ம் இடம்**
மாதகல் சென்தோமஸ் ரோ. க. பெ. பா.
ம. சரோஜினி

**4-ம் இடம்**
ஊர்காவற்றுறை சென்மேரிஸ் ரோ. க. பெ. பா.
பி. வெனிஸின் சிறிலா

### 7-ம் வகுப்பு

**இல்லறத்தார் நடாத்தும் பாடசாலைகள்**

**1-ம் இடம்**
நாவாந்துறை ரோ. க. பாடசாலை
செ. யேசுதாசன்

**2-ம் இடம்**
பரித்தித்துறை சென்தோமஸ் ரோ. க. பெ. பா.
அ. புளோறன்ஸ் றூணி

**3-ம் இடம்**
கொழும்புத்துறை சஞ்சூசையப்பர் சாதனகழகம்
வ. அருளானந்தம்

**4-ம் இடம்**
மல்வத்தை ரோ. க. பாடசாலை
மா. அன்னம்மா

**துறவறத்தார் நடாத்தும் பாடசாலைகள்**

**1-ம் இடம்**
சென்மேரிஸ் ரோ. க. பெண்பாடசாலை
நீ. லில்லி விறீடா

**2-ம் இடம்**
பாஷையூர் அர்ச். அந்தோனியார் பாட.
அ. லில்லிமலர்

**3-ம் இடம்**
இளவாலைமடம் தமிழ்ப்பாடசாலை
அ. மேரி யோசேப்பின்

**4-ம் இடம்**
நாரந்தனை ரோ. க. பெண்பாடசாலை
வ. டொ. மெற்றில்டா றெஜி

### 8-ம் வகுப்பு

**இல்லறத்தார் நடாத்தும் பாடசாலைகள்**

**1-ம் இடம்**
நெடுந்தீவு ரோ. க. ஆண்பாடசாலை
வ. அந்தோனிப்பிள்ளை

**2-ம் இடம்**
கலட்டி ரோ. க. பாடசாலை
கொ. ஸ்ரீபன்

**3-ம் இடம்**
கொழும்புத்துறை சஞ்சூசையப்பர் சா. க.
அ. பத்மநாதன்

**4-ம் இடம்**
குருநகர் சென்ஜேம்ஸ் ரோ. க. ஆண்பாட.
அ. யேசுதாசன்

**துறவறத்தார் நடாத்தும் பாடசாலைகள்**

**1-ம் இடம்**
பாஷையூர் அர்ச். அந்தோனியார் பாட.
ஞா. பிறிஜிற்

**2-ம் இடம்**
இறம்பைக்குளம் ரோ. க. பெ. பாட.
செ. பிறிம் றோஸ்

**3-ம் இடம்**
சில்லாலை ரோ. க. பெண்பாடசாலை
அ. மரிஸ்ரெல்லா

**4-ம் இடம்**
முல்லைத்தீவு ரோ. க. பெண்பாடசாலை
செ. மரியராசேஸ்வரி

### G. C. E. Prep.

**இல்லறத்தார் நடாத்தும் பாடசாலைகள்**

**1-ம் இடம்**
வங்காலை ரோ. க. ஆண்பாடசாலை
சி. அல்விறட் சோசை

**2-ம் இடம்**
அடம்பன் ரோ. க. பாடசாலை
பே. தேவசகாயம்

**3-ம் இடம்**
நெடுந்தீவுநடுக்குறிச்சி ரோ. க. ஆண்பாட.
அ. அருட்பிரகாசம்

**4-ம் இடம்**
குருநகர் சென்ஜேம்ஸ் ரோ. க. ஆண்பாட.
ய. செபஸ்தியாம்பிள்ளை

**துறவறத்தார் நடாத்தும் பாடசாலைகள்**

**1-ம் இடம்**
சில்லாலை ரோ. க. பெண்பாடசாலை
கு. பேர்னதேத்

**2-ம் இடம்**
சில்லாலை ரோ. க. பெண்பாடசாலை
சூ. கொலஸ்ரிக்கா

**3-ம் இடம்**
மாதகல் சென்தோமஸ் ரோ. க. பெ. பா.
திசைநாயகம் மாகிறேற்

**4-ம் இடம்**
பேசாலை ரோ க. பெண்பாடசாலை
ம. அந்தோனிப்பிள்ளை

### G. C. E.

**இல்லறத்தார் நடாத்தும் பாடசாலைகள்**

**1-ம் இடம்**
புதுக்குடியிருப்பு ரோ. க. பாடசாலை
ஞா. மருசலீனம்மா

**2-ம் இடம்**
புங்குடுதீவு ரோ. க. ஆண்பாடசாலை
லோ. நித்தியானந்தம்

**3-ம் இடம்**
வதிரி தெற்கு ரோ. க. பாடசாலை
இ. ஆனந்தராணி எலிசபேத்

**4-ம் இடம்**
வற்றுப்பளை ரோ. க. பாடசாலை
சி. ம. அந்தோனிப்பிள்ளை

**துறவறத்தார் நடாத்தும் பாடசாலைகள்**

**1-ம் இடம்**
மாதகல் சென்தோமஸ் ரோ. க. பெண்பாட.
ப. மில்றெற்

**2-ம் இடம்**
குருநகர் சென்ஜேம்ஸ் ரோ க. பெண்பாட.
அ. ரோசாறி

**3-ம் இடம்**
யாழ்ப்பாணம் அடைக்கலநாயகி பாட.
ஞா. றெஜினு

**4-ம் இடம்**
ஊர்காவற்றுறை சென்மேரிஸ் ரோ. க. பா.
யோ. மேரி குயின் மலர்

# ரோமைக் கண்ணாடி

— வண. நீ. மரியசேவியர் —

### கத்தோலிக்க மனம்

ரோமையில் ஒலிம்பிக்விளையாட்டுகள்! பழைமையை அழிக்காது புதியனபுகுத்திய இருஉலகங்களின் சந்திப்பு! புதுமையும், புத்துயிரும் பெற்றுநின்ற அந்தஉலகங்கள். பார்த்தவர்களுக்கும், கேட்டவர்களுக்கும் இன்பத்தையே கொடுத்தன...இன்றையபுதியஉலகில் பகைஉண்டு; பயம் உண்டு. அதற்குமாருகப் பழையஉலகங்கள் சந்தித்தபொழுது மனிதப் பண்பு சுடர்விட்டுஎரிந்தது. சிலநாட்களுக்காவது இன்றையஉலகத்தையே மறக்கச்செய்துவிட்டன.

1960-ம்வருட ஒலிம்பிக்விளையாட்டுக்களுக்கு ஒருதனிச்சிறப்பு உண்டு. கத்தோலிக்கசமயத்தின் இதயமாகிய ரோமைதான் அதை அளித்தது என்பதில் சந்தேகம்இல்லை. அதைக் "கத்தோலிக்கமனம்" என்றுதான் அழைக்கவேண்டும்......விளையாட்டுகளில் பங்குபற்ற ரோமைக்கு வந்திருந்தவர்களுடன் பரிசுத்ததந்தை கொண்டஉறவு — கோடைமாளிகையில் அளித்தபேட்டிகள் விளக்கம்தேடி வந்தவர்களுக்கு மறுப்பில்லாது அளித்தஉதவி — இப்படி இன்னும் எவ்வளவோ இருக்கின்றன.

ஆவணி23. சாயந்தரவேளை அர்ச். பேதுருவானவர் சதுக்கத்தில் கூடியிருந்தமக்கள் உலகத்தின் எல்லாப் பாகங்களிலுமிருந்து இரும்புத்திரை முதலாய் உட்கொண்டு வந்துகுழுமியவர்கள் எல்லோரும் கத்தோலிக்கர் அல்ல. அவர்களுக்குத் தந்தைஅருளப்பர் தம்துஇனிய அழகானஇலத்தீன்மொழியில் கூறியநல்வார்த்தைகள் மனக்குளிர்ச்சியை அன்றி, வேறு எதைத்தான் கொடுக்கும். "போட்டி இடுபவர்களின் உண்மையான தகுதியையும், பெருமையையும், நித்திய நகரின் அந்தரங்ககுரலையும் கேட்க வேண்டும்"; "ஒவ்வொருவரையும் வெற்றிபெறுவீராஎன்று நிச்சயப்படுத்தா விட்டாலும் இந்தவிளையாட்டுகளினால் நன்மையும், நல்லபலன்களும் அடையவேண்டும்" என்று ஆசிக்கிறோம். "உடலைப்பொறுத்தவரையில் சுகம், தைரியம் அங்கசுறுசுறுப்பு. உள்ளத்தைப் பொறுத்தமட்டில் உறுதி, பலம், மறுதலிப்பு" என்று விளையாட்டுகளினால்வரும் நன்மைகளைப்பற்றிக் கூறினார். பேச்சுமுழுவதிலும் பவுல்அப்போஸ்தலர் கூறிய பொன்மொழிகள் இழையோடிக் கொண்டிருந்தன. "பந்தையசதுக்கத்தில் ஓடுகிறவர்கள்எல்லோரும் ஓடுகிறார்கள். ஆனால், ஒருவனே கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளுகிறான்என்று அறியமாட்டீர்களா? நீங்களும் பெற்றுக் கொள்ளத் தக்கதாக ஓடுங்கள்; பந்தையத்திலே மல்லுக்கட்டுகிறவர்கள் எல்லாக்காரியத்திலும் இச்சையை அடக்கிறார்கள்."

ஒலிம்பிக்அமைப்புக் குழுஒன்றைத் தம்முடையகோடைமாளிகை இல்லத்தில் அழைத்துப் பேசிக்கொண்டிருந்தபோது, ஒருஜப்பானியர் குழந்தையைப்போல அழத்தொடங்கி விட்டார் என்று செய்திவெளிவந்தது. ஞாயிற்றுக்கிழமை எல்லோருக்குமே ஓய்வு நாளாக்கப்பட்டதுஅன்று. ஆயினும் கத்தோலிக்கர் அல்லாதவர்களுமே கோவில்களைப் பார்க்கச்சென்றதாகக் கூறப்படுகின்றது.

86நாடுகளின்கொடிகள் சரிசமமாகக் காற்றுடன் பறந்துகொண்டிருந்தன. பங்குபற்றிய போட்டிவீரர்கள் வேற்றுமையைமறந்து முரணனகொள்கைகளை மறந்து சகோதரர்கள்போல நடந்துகொண்டார்கள். அமெரிக்கரும், ருஷியரும் ஒரேமேடையிலே ஏறிக் கைகொடுத்து ஒருவர்ஒருவரைப் பாராட்டிக்கொண்டார்கள். கிழக்கு, மேற்கு ஜேர்மனிகள் ஒரேகொடியின் கீழ் போட்டியிட்டன. சுருங்கக்கூற வேண்டுமானால், புதுமையான ஒரு உலகம்தோன்றியது. அது இளைஞர்களுடைய உலகம். மனிதப் பண்பை மதித்தஉலகம். ஒற்றுமையின்உலகம். அதனால் உள்ளக்கிடக்கையையே உணர்த்திநின்ற உலகம்.

### காரணம் ஏது?

ஒலிம்பிக்விளையாட்டுகள் நடந்துகொண்டிருந்த நாட்களிலே அதிகமாக வெளிநாடுகளிலிருந்து அநேகர் நித்திய நகருள் சரிந்துகொண்டிருந்தார்கள். நிறமுகங்களையும், விதம்விதமான மொழிகளையும் கேட்பதும், பார்ப்பதும் ரோமைக்குப்புதிது அல்ல. ஆயின் அப்படித் திரள்திரளான மக்களைக் காண்பதும் சாதாரணம்அல்லவே. ரோமையைப்போலத்தான் பாப்பரசர் பேட்டி அளிக்கும் மண்டபமும் நிறைந்திருந்தது. "இடிபட்டும்,அடிபட்டுமா" பாப்பரசரைப் பார்க்கவேண்டும் என்ற சிலசமயத்தில் தோன்றும். பாப்பரசருக்கு அளிக்கப்படும் உணர்ச்சிவேகமுள்ளவரவேற்பைப் பார்க்கும்பொழுது கத்தோலிக்கர் அல்லாதவர்களிடத்தில் ஆச்சரியக்குறி தோன்றும். அதுவும் இத்தாலிய, பிரெஞ்சு மொழிகளில மட்டும் பேசியபாப்பரசர் ஆங்கில ஸ்பானிய மொழிகளிலும் பேசத்தொடங்குவது என்றால் யாருக்குத்தான் வியப்பைத்தாராது? வியப்புஆதரவாகவும், அனுதாபமாகவும், அன்புச் சின்னமாகவும் மாறி முழந்தாளிலிருந்தே ஆசிரைப்பெறச் செய்யும்என்றால் கத்தோலிக்கஅகம் மலராதிருக்குமா? என்ன!

அதுதான் போகட்டும். ஒருசிறு கேள்வி மனத்தில்தோன்றுகின்றது. தந்தைஅருளப்பரை வாரத்துக்கு இருமுறை, கடைசிஒருமுறையாவது பார்க்கிறோம், அவர்கூறும் அன்புமொழிகளைக் கேட்கிறோம். இருந்தும் இன்னும்ஒருதடவையல்ல, ஒன்பதாயிரம்தடவைதன்னும் பார்க்கவேண்டும் என்றாலும் சலிப்புத்தட்டுவதில்லை. அதுஏன்? என்பதுதான் கேள்வி. சிந்தித்துப்பார்க்கும்பொழுது இயற்கையானகாரணங்கள் எதுவும் அல்ல. தெய்வீகஒளியின் நிழல்ஒன்று பிரதிபலிப்பதுதான் காரணமெனத் தோன்றுகிறது. இறைவன் தம்மால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களைச் சரித்திரவீரர்களாக்கியது அந்தக்காலத்தில் மாத்திரம்அல்ல. இப்பொழுதும், இன்னும் அவரின் கைவேலைப்பாட்டை உணர்ந்து அறிந்துகொள்ளலாம், அதற்குவேண்டியது கூரிய அறிவுஅல்ல. தூயமனம்.

"சந்ததி விருத்தியைத் தேவையான அளவுக்குக் கட்டுப்படுத்திக் கொள்ளச் சுய கட்டுப்பாடு ஒன்றுதான் நிச்சயமான மார்க்கம். கர்ப்பத்தடைக் கருவிகளைப் பயன்படுத்தினால் அது மனித குணத்தின் தற்கொலையாகும்."

— காந்தியடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னமலரின் அன்னை தந்தையர்

(முன்தொடர்ச்சி)

### 4. குழந்தைப்பேற்றில் குதூகலம்

மாட்டின் தம்பதிகளின் இல்லறப் பூங்கா தொடர்ந்து பூத்துக் குலுங்கியது. வண்ணமலர்கள்பல அங்குதோன்றின. மரியபொலின் 1861-ம் வருடம் புரட்டாதி மாதம் ஏழாந்திகதியிலும், மரியலியோனி 1863-ம் வருடம் ஆனி மாதம் மூன்றாந்திகதியிலும் இவ்வுலக வாழ்வைத் தொடங்கினர். 1864-ம் வருடம் ஐப்பசிமாதம் பதின்மூன்றாந்திகதி மரிய கெலன் பிறந்தபொழுது அப்பிரசவம் ஷீலிக்கு ஓர்சோதனையாயிருந்தது. அன்னையையும் புதல்வியையும் வெவ்வேறாகப்பராமரித்தல் அவசியமென மருத்துவர்கள்கருதினர். கெலன் மருத்துவ மனையொன்றிற்கு அனுப்பப்பட்டாள். தன் குழவியைப் பிரிந்திருப்பது மாட்டின் அம்மையாருக்கு அளவில்லாத் துன்பத்தைக் கொடுத்தது. ஆயின் ஒவ்வோர்தடவையும் தன் செல்வியைத் தரிசிக்கச் செல்லும்பொழுது அவள் அடைந்த பேரானந்தம் அளவிடற்கரியது. தன் கடிதங்களிலொன்றில் அதுபற்றிக் கெலன் குறிப்பிடுகிறாள்:- "சென்ற செவ்வாய்க்கிழமை எனது சின்னக் கெலனைச் சந்திப்பதற்குச் சென்றேன். அதிகாலை ஏழு மணிக்கே புறப்பட்டேன். காற்றும், மழையும் கலந்தடித்து என்பிரயாணத்தில் பெரும் உபத்திரவத்தை அளித்தன. மிகுந்த களைப்புடன் சோர்ந்து விழுந்தஎன்னை விரைவில் என் செல்வத்தைக் கரங்களால் எடுத்து மார்புடன் அணைத்துக்கொள்வேன் என்ற எண்ணம் புத்துயிரடையச் செய்தது. என் செல்வியைத் தூக்கியணைத்த பொழுது யான் பெற்ற இன்பம் எல்லையற்றது; வர்ணித்தற்கரியது. அச்சிறுமியின் புன்னகையானது மாசுமறுவற்ற சின்னஞ்சிறிய தேவதூதனை எனக்கு நினைவூட்டியது. அப்புன்னகையின் பொன்னொளியில் யான் என்னையே மறந்தவளாய்ச் செய்வதொன்றறியாது பரவசமாக நின்றேன். இத்தேடற்கரிய திரவியத்தின் அன்னையாகும் தகுதிக்கு யான் எங்ஙனம் உரியவளானேன் என்பதை என்னால புரிந்துகொள்ளவே முடியவில்லை."

ஒருமுறை ஒரேசூலில் மூன்று குழந்தைகளைப் பிரசவித்த பெண்ணொருத்தியைப்பற்றிக் கேள்வியுற்றபோது திருமதி மாட்டின் வியப்புடன் கூறினாள்:- "ஆ, எவ்வளவு பாக்கியமுள்ள அன்னை அவள். எனக்கு இரட்டைப் பிள்ளைகளாவது கிடைத்தால்... ஆயின் அவ்வளவு பாக்கியத்தை யான் இதுவரை பெறவில்லை." ஷீலி தொட்டிலை எப்போதுமே நேசித்தாள். புதிதாகப் பிரசவிக்கும் குழவியின் அழுகுரல் அவளைப் பரவசமாக்கும். சின்னஞ் சிறுசுகளின் குறுகுறு நடையும், மழலைப்பேச்சும் எதற்குமே ஈடாகா என அவள்கருதினாள். "என்னுடைய குழந்தைகள் நல்ல வளர்த்தியுடன் காணப்படுகின்றனர். அவர்களைக் காண்போரெல்லாம் அவர்களைப்பாராட்டாது செல்வதில்லை. இந்தச் செல்வங்களுக்கு யான் அதிபதி. ஆம், அவர்கள் யான் பெற்ற செல்வங்கள்" என அவள் அடிக்கடி களிப்புடன் கூறுவாள்.

அடிக்கடி ஷீலியின்லிகிதங்களைப் பெற்ற அவளது அருமைத் தோழியர்கள் அவற்றிலெல்லாம் அவளது குழந்தைகளைப்பற்றியே அவள் அதிகமாக எழுதியிருந்ததாகக் குறிப்பிடுகின்றனர். ஓரிடத்தில் பொலினைப்பற்றி எழுதுகிறாள்:- "அவள் சிறுமியாயினும் ஒவ்வோர் கருமங்களையும் நன்கு விளங்கிக் கொள்கின்றாள். பெரியவெள்ளியன்று ஒரு கன்னியாஸ்திரியைப்போல் வேஷமிடப்பட்ட பொம்மை ஒன்றைக் கையிலெடுத்துக்கொண்டு இது என் சின்னம்மா என்று கூக்குரலிட்டாள். பின்னர் ஒரு புகைப்படத்தைத் தன் சகோதரியிடம் காட்டி என் தொட்டப்பாவைப்பார்; அவரது தலையில் நிரம்ப மயிர்கள் உண்டு; ஆயின் உன்னுடைய தொட்டப்பாவின் தலையில் மயிர்கள் கிடையா" என ஏளனமாகக்கூறினாள்.

தனது தோழியர்களுடன் தன் குடும்பநலன்களைப்பற்றிப் பேசுவதிலும் அவர்களுடன் இறைவனுக்கடுத்த கருமங்கள்பற்றி வாதாடுவதிலுமே தனது ஓய்வுநேரத்தைக் கழித்த இந்தஅன்னை இன்றைய கத்தோலிக்க தாய்க்குலத்தோருக்கு முன்மாதிரிகையாக விளங்குகிறாள். தங்கள் குழந்தைகளின் நல்வளர்ப்பில் அசட்டை காட்டி அயலவர்களுடன் வீண் வம்புபேசுவதில் இன்று பொழுதைப் போக்கிவரும் மங்கையர்கள் எவ்வளவுபேர்? அழகு குறைந்துவிடும், தொல்லை நிறைந்துவிடும், உல்லாசம் மறைந்துவிடும் என்றெல்லாம் எண்ணிக்கொண்டு கர்ப்பத்தடை, குடும்பக்கட்டுப்பாடு என்ற நவீனகொள்கைகளைப் பின்பற்றும் நாரீமணிகள் எத்தனைபேர்? இதோ குழந்தைப்பேற்றை இறைவன் தந்த வரப்பிரசாதமெனக் கருதிய ஓர் அன்னை இல்வாழ்வு துன்பம் நிறைந்ததென எப்போதாவது முறையிட்டவளல்ல. இவள் குடும்ப வாழ்வில் எதிர்ப்பட்ட மேடுபள்ளங்களையெல்லாம்பொறுமையுடனும், சகிப்புத் தன்மையுடனும் சமப்படுத்திக் குதூகலமாக மாற்றி இன்பங்கண்ட உத்தமி. ஆம், இவளின் வாழ்க்கை இன்றைய மங்கையருக்கெல்லாம் ஓர் கலங்கரை விளக்கல்லவா?.

### 5. வழிதடுமாறுவோர்க்கு ஒரு வழிகாட்டி

ஷீலியின் இளைய சகோதரன் இசிதோர், நாகரீகவாழ்வின் உச்சநிலையில் உல்லாச நடமிடும் பரீஸ் மாநகரில் இயைபியற்கலை பயிலச்சென்றான். இன்பம் எவ்வித வழிகளினாற் பெறப்படலாமென்று ஆராய்வதை — சிற்றின்பக் களியாட்டங்களில் இரவு பகலென்றின்றி ஈடுபடுவதைத் தன்சிறப்பாகக் கொண்டுள்ள பரீஸ்நகரில் அவன் சாங்கோபாங்க சீவியத்திலிருந்து பிசகிவிடக் கூடுமெனக் கவலைகொண்டாள் ஷீலி. அடிக்கடி லிகிதங்கள்வரைவதன்மூலம் தன் தம்பியின்எண்ணங்கள், நடத்தைகள் தவறான வழியிற் செல்லாதிருக்கத் தகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டாள்.

"...செபி; அதிகமதிகமாகச் செபி; சாத்தானின் தூதர் உன்னை நடாத்துமளவுக்கு நீ இடங்கொடாதே. தீய வழியில் செல்வதற்கு அதிக பிரயாசை எடுக்கவேண்டியதில்லை. முதற்படியில் காலடி எடுத்துவைப்பதே போதுமானது. நல்வழியிற் செல்வதோ அப்படியல்ல... நீ வெற்றிநாயகியின் ஆலயத்துக்கு அண்மையில் வசிக்கின்றாய். ஒருநாளில் ஒருமுறையாவது அங்கு செல். ஒரு பிரியதத்தமந்திரமாவது செபி. தேவஅன்னை உன்னைப் பாதுகாப்பாள். இவ்வுலகில் நீ தலையிடும் காரியங்களில் வெற்றிகாணச் செய்வாள். மறுவுலகத்திலும் இன்பம் துய்க்க வழிசெய்வாள். யான் தேவ அன்னையை எப்போதுமே தஞ்சமாகக் கொண்டுள்ளேன். ஏனெனில், அவள் எனக்குச் செய்துவரும் நன்மைகள் ஏராளம். அவற்றை மற்றையோர் அறியமாட்டார்கள்... வாழ்வு நிரந்தரமானதல்ல. விரைவில் நாமனைவரும் ஒருமுடிவை எதிர்பார்க்கவேவேண்டும். இவ்வுலகில் நாம் தங்கியுள்ள சொற்பகாலத்திலே நன்னெறியில் சென்றால் பின்னர் அதனாலடையும்பயன் நித்தியமானது" என அவளது கடிதங்கள் இசிதோருக்கு இடித்துரைத்தன.

(வளரும்)

# தாம் ஓர் கிறீஸ்துவர்தானா?

(முன்தொடர்ச்சி)

ஜப்பானியதேசத்தின் பிரபுத்துவ குடும்பங்களுக்கெல்லாம் ஒருதிலகாத்தினம்போலத் திகழ்ந்துகொண்டிருந்த தீயஸ்பிரபுகுடும்பத்தின் புராதனப் பெருமைவாய்ந்த அரண்மனையை இரு சுடர்மணிகள்போன்று துலங்கச் செய்துகொண்டிருந்த அருந்தவமணிகளாகிய மத்தியாஸும், மார்த்தீனாளும் அம்மனையை விட்டு அகன்றபோதே அது சோபையிழந்து, காரிருள்சூழ்ந்ததாய்க் காணப்படலாயிற்று. தங்களது இருகண்களேபோல் — கண்ணின் இரு கருமணிகளேபோல் அத்துணை கருத்தாகப் பேணிவளர்த்துவந்த இளையபிள்ளைகள்இருவரும் தங்களை விட்டுப் பிரிந்தபோதே தீயஸ்பிரபுவும், அவருடைய தர்மபத்தினியும் தீராக் கவலைகொண்டார்கள்.

ஆயினும் இந்தக்கவலைப்பெருக்கின் மத்தியில் இடையிடையே காரிருளில் மறைந்துதோன்றும் இளஞ்சூரியனைப் போன்று அவர்களின் இதயங்களில் சந்தோஷப்பெருக்கும் தோன்றிக் கொண்டுவாராமலில்லை. இளம்வயதிலே இருபிள்ளைகளையும் இழந்ததையிட்டு ஒருபால்துன்பமும், அவர்கள் வேதத்துக்காகத் தங்கள்பிராணனைக்கொடுத்து இளம்வேதசாட்சிகளாகி யிருப்பதையிட்டு மறுபால்இன்பமும் அவர்களின் உள்ளத்தில் பிறந்துகொண்டிருந்தன. இவ்விதமாகத் துன்பமும், இன்பமும் சுழல்சக்கரம்போன்று மாறிமாறிச் சுற்றிவந்துகொண்டிக்கையில் இன்னமும் தங்களுடன் எஞ்சியிருந்த மூத்த புதல்வன் சீமோனைவிழித்துக் கண்கள் இரண்டும்கலங்கத் தீயஸ்பிரபு சொல்லுவார்:

"எங்கள்செல்வமே, செல்வமைந்தனே, உன்தம்பி மத்தியாஸிலும், உன் தங்கை மார்த்தீனாளிலும் வேதவிசுவாசத்தில் நீ குறைந்தவனல்ல. பேரும் புகழும்படைத்த தீயஸ்பிரபுவாகிய உன் தந்தையின் சிரேஷ்டபுதல்வன் நீஎன்பதையும், அவருடைய உதிரந்தான் உனதுஉடலிலும் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதையும் நீமறவாதே. நீயும், அவர்களும் உன்தாயின் ஒரேஉதரக் கனிகள் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள். உனது உடன்பிறவிகள் இருவரும் வேதசாட்சிமுடி சூடிவிட்டார்கள். நீயும் அந்தவீரசாட்சிமுடியைச் சூடிக்கொண்டு விரைவிலே தங்களோடு வந்துசேருவாயென்று பரகதியில் அவர்கள் உனதுவரவை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள். மகனே! சந்தோஷமாயிரு. உன்தம்பி மத்தியாஸ் தீச்சுவாலையில் தூக்கிஎறியப்பட்டான். உன்தங்கைமார்த்தீனாள் சிங்கக்கெபியில் தூக்கிவீசப்பட்டாள். உன்னையும் அவர்கள் தீச்சுவாலையில் எறிந்தால்என்ன! சிங்கக்கெபியில் வீசினாலென்ன, சிலுவையில்தானும் அறைந்தாலென்ன எதற்கும்அஞ்சாதே. தைரியமாயிரு. எமக்காகத் தமது ஆருயிரைத் தியாகஞ்செய்த யேசுபெருமானுக்காக— அவருடைய திருவேதத்திற்காக நாமும் எமதுஆருயிரைத் தியாகஞ்செய்யவேண்டாமா?" என்று அன்புபொங்க மொழிந்தார்.

அப்போது அங்கு ஓர்ஆசனத்தில் அமர்ந்தபடியே கண்ணீர்ஆறாய்ப் பெருகியவண்ணம் அவர்சொன்னதைக் கேட்டிருந்த தாயானவள் தன்னை அடக்கிக் கொள்ளவாற்றாது கோவென்று அலறிக்கொண்டு எழுந்தோடிச்சென்று தனது அருமைமைந்தனை இருகரங்களாலும் இறுகத்தழுவியபடி, "என் ஆசைமகனே, நேற்று உன்தம்பியின் முறை; இன்று உன்தங்கையின்முறை; நாளை மகனே உன்முறை; அவர்களைப் போலவே உன்னையுமநான் பத்துமாதஞ் சுமந்து பெற்றெடுத்தேன்; சீராட்டித் தாராட்டிப் பாலூட்டிவளர்த்தேன்; மகிமைவாய்ந்தஎமதுகுடும்பத்தைவிளக்கத் தலைமகனாய்உதித்த எம்தவக்கொழுந்தே! அதோ விண்ணுலகைஏறெடுத்து உனது ஞானக்கண்களைத் திறந்துபார்; வேதசாட்சிகளாகி மோட்சமுடிசூடிய உன் ஆசைத்தம்பி மத்தியாஸும், உன் அருமைத்தங்கை மார்த்தீனாளும் இரு வானசோதிகளைப்போன்று சுடர்வீசிக் கொண்டு வானதூதர்களுடனும், ஏனைய பரலோகவாசிகளுடனும்சேர்ந்து தேவகானங்களை இன்பகரமாகப் பாடிக்கொண்டிருப்பதைப்பார். அவர்கள் அடைந்த மோட்சானந்தத்தை நீயும் ஆசிக்கவேண்டாமா? அடையவேண்டாமா?" எனப்பகர்ந்து தனதுகண்ணீரால் அவனைக்குளிப்பாட்டினாள்.

தனதுஅன்பான தந்தையும், அன்னையும்கூறியமொழிகளை அதுவரைமௌனமாகக் கேட்டுநின்றசீமோன் மலையே கலங்கினும் மனமேகலங்காதஅத்துணை மனோதிடத்துடன் அவர்களை இருகரமெடுத்து வணங்கினான். அதன்மேல் சாந்தமாக அவர்களைவிழித்து, "திவ்வியயேசுவை மும்முறை மறுதலித்த சீமோன் பேதுருவைப்போல உங்கள் மகன் சீமோனும் அவரையும், அவருடைய திருவேதத்தையும் மறுதலித்துவிடுகிறானோ என்றுதான் நீங்கள்சந்தேகப்படுகிறீர்கள்போலும்; அஞ்சாநெஞ்சம்படைத்த வீரர்திலகமாகிய தீயஸ்பிரபுவின் சிரேஷ்டபுதல்வனான சீமோன் அரசனின் கொடியஆக்கினைக்கு அஞ்சிப்பயந்து இதுவரைமெய்யங்கடவுளெனத் தான்கையெடுத்துவந்த கிறீஸ்து பெருமானையும், அவருடைய திருமறையையும் கைநெகிழ்ந்து தனதுகுடும்பத்துக்கும், குலத்துக்கும் பேரவமானத்தை உண்டுபண்ணுவதைக் காட்டிலும் அவன் இதோ தங்கள் முன்னிலையிலேயே தனதுஉயிரைத் துறக்கத்தயாராயிருக்கிறான்; சூரியன் சுடர்குன்றினும், சந்திரன் கலைகுன்றினும், நட்சத்திரங்கள் நிலைகுன்றினும் அவன் கொண்டுள்ளதிடவிசுவாசமோ ஒருபோதுமே, ஒருநாளுமே, ஒருகாலுமே குன்றப்போவதுமில்லை; குறையப்போவதுமில்லை. தன்னுடைய தம்பி மத்தியாஸும், தங்கை மார்த்தினாளும் சென்றவழியே தானும்செல்ல அவன் திடசித்தமாயிருக்கிறான்; ஆகவே, எனது அருமைத்தந்தையே, தாயே என்னை ஆசீர்வதித்துச் சந்தோஷமாக வழியனுப்புங்கள்" என்று முழந்தாட்படியிட்டு அவர்களை வணங்கிநின்றான்.

(வளரும்)

● ருஷியாவின் கம்யூனிஸ்த ஆட்சியாளர்கள் வேதகலாபனையைப் புதிதாய்த்தொடக்கி, மும்முரமாகநடத்த ஆயத்தப்படுவதாக வத்திக்கான் தினவர்த்தமானி செய்தி வெளியிட்டிருக்கிறது. சோவியற்ருஷியாவிலே ஒருபோதும் நிறுத்தப்பட்டிராத சமய விரோத பிரசாரம் சமீபத்திலே அதிகம் உக்கிரமாயும், அதிகம் பரக்கவும் அதிகரித்திருப்பதாய் அது தெரிவித்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை
### ஐப்பசி — 1960

| | | | |
|---|---|---|---|
| ச. | 8 | அர்ச். விறிசித்தம்மாள் | [வெ] |
| ஞா | 9 | பெந்தக்கோஸ்தின் பின் 18-ம் ஞாயிறு (அர்ச். லெயோனுடி அருளப்பர் ஞா,) (வி.ம.) | [ப] |
| திங. | 10 | அர்ச். பிரான்சீஸ்கு போர்ஜியா | [வெ] |
| செ. | 11 | கன்னிமரியாயின் தேவதாய்மைத்திருநாள் (வி.ம.) | [வெ] |
| புத. | 12 | காலதினம் (ஞாயிறுபூசை) | [ப] |
| வி. | 13 | அர்ச். எற்வேட் | [வெ] |
| வெ. | 14 | அர்ச். கலிஸ்திஸ் அப்பர் | [சி] |

சத்திய வேத
பாதுகாவலன்
1960-ம் ஆண்டு
ஐப்பசிமாதம் 6-ந் திகதி

## திருச்செபமாலை

சுகந்த பரிமளம்வீசிக் சகலரையும் குதூகலிக்கச்செய்யும் மலர்மாலை சிறிதுவேளையில் வாடிவதங்கி உதிர்ந்துவிடுகிறது. ஆனால், மரியன்னை தந்த செபமாலை என்றுமேவாடாத ஒருமலர்மாலையாகும். அப்போது அல்பிஜென்ஸ்எனப்படும் பதிதர்களால் திருச்சபைக்கும், அரசாங்கங்களுக்கும் பலவிதஅபாயங்கள் நேர்ந்தன. அவைகளைஒழிப்பதற்குச் சர்வபிரயாசைப்பட்டும் ஆனபலன் ஒன்றுமில்லை. அப்போது ஒருநாள்தேவதாயார் 153 மணிச்செபமாலையைக் கரத்தேந்தியவண்ணமாய் அர்ச். சாமிநாதருக்குத் தரிசனையானார். அந்தச் செபமாலையை அவருக்குக்காண்பித்து அதைச்செபிக்கும் முறையையும் அவருக்குப்படிப்பித்தார். அவ்விதம் சகலகிறீஸ்தவர்களும் அதனைச்செபிக்கும்படி செய்யுமாறு அவருக்குக்கட்டளையிட்டார். அவரும் அவ்விதம் செய்யவே செபமாலைப்பக்தி மக்களிடையேபரந்தது. அதன்விளைவாய் அந்தப்பதிதமதமும் இருந்தவிடமேதெரியாமல் அழிந்தொழிந்தது. பிந்தத்துருக்கியர் ஐரோப்பியநாடுகளின்மேல் படையெடுத்தனர். அவர்களின் பிரமாண்டமானபடைகள் அந்நாடுகளை அழிக்கவும், கிறீஸ்துசமயத்தை ஒழிக்கவும் வகைதேடியது. அப்போது கிறீஸ்தவர்கள் தேவதாயார் தங்களுக்குத்தரத் திருவுளங்கனிந்த வெற்றிக்கேடயமாகிய செபமாலையைக்கரத்திலேந்தினர். பக்திபற்றுதலுடன் அதைச் செபித்தனர். மாதாவின் அருளால் கிறீஸ்தவர்களின் சிறிய படைஒன்று சமுத்திரம்போன்ற துருக்கியரின்படைகளைத் தும்சம் செய்து ஐரோப்பாமுழுவதுமே அதிசயிக்கும்படியாகச் செயபேரிகைமுழக்கியது. அவ்வப்போதெல்லாம் ஒன்றின்பின் ஒன்றாக வந்துகொண்டிருந்த பேராபத்துக்களிலிருந்து திருச்செபமாலையாலே பாதுகாக்கப்பட்டு வந்த திருச்சபையையும், உலகத்தையும் இதோமுற்றாக விழுங்கப்போவதாய் இன்றுநாஸ்திக பொதுவுடைமையும், உலகமே சதமென்ற லோகாயதமும் அச்சுறுத்திக்கொண்டிருக்கின்றன. இந்தஅச்சுறுத்தலை எதிர்த்துநின்றுசெயிக்க நம்மிடம் மகாபலம்பொருந்திய ஆயுதம் ஒன்றுண்டு. அதுதான் மாதா தந்த மகத்தானகேடயமாகிய செபமாலை. தேவநீதியானது பாவ உலகைப் பழிவாங்குவதிலிருந்து காப்பாற்ற - சனசமுதாயங்களின் நன்மையைவளர்க்க —சர்வதேச ஐக்கியத்தைவளர்க்க — பொதுவுடைமைவாதிகளின் மிரட்டலையும், நாஸ்திகத்தையும், லோகாயதத்தையும் வென்றொழிக்க—நாடுகளிடையே இருந்துவரும் குரோதம், துவேஷம், யுத்தபயங்கரம், சந்தேகம் ஆதியவற்றைப் போக்கிச் சமாதானம்நிலைக்க நாம் கையாடத்தகுந்த வழிவகை செபமாலையே. இன்று எமதுநாட்டிலும்தான், இன்னும்எத்தனையோ நாடுகளிலும்தான் ஜனநாயகத்தையும், சமாதானத்தையும் நமது கத்தோலிக்க சற்சமயத்தையும் ஒருகைபார்த்துவிடுவதாகப் பொதுவுடைமைவாதிகள் போர்க்கோலந்தாங்கி நிற்கையில் நாம் மாதாதந்த செபமாலையை ஆயுதமாகத்தாங்குவோம். அனுதினமும் அதனைப்பயபக்தியாகச் சொல்லிவருவோம். அதைக் கையிலெடுத்து மாதாவைக் கையெடுத்து அவரின்பாதுகாவலை இரந்துமன்றாடுவோம்.

---

### கத்தோலிக்க அச்சகபணியாளரைக் கருதினுல் ஆண்டகை சந்திக்கின்றார்

கொழும்புக் கத்தோலிக்க அச்சகபணியாளரான நூற்றுக்குமேற்பட்டவர்கள் சென்றவெள்ளிக்கிழமை உருமத்தின்போது பொறளையிலுள்ள அதிமேற்றிராணியாரின் மாளிகையிலே கருதினுல்அகஜியானியன் ஆண்டகை அவர்களைச் சந்திக்கலானார்கள். இவர்களிலே "கதலிக் மெசஞ்சர்" "ஞானார்த்த பிரதீபய" எனும் பத்திரிகைகளின் ஆசிரியர்கள், உதவிஆசிரியர்கள், மற்றும்பதிப்பாளர், லிகிதர்கள், அச்சடுக்குவோர், யந்திரங்களை இயக்குவோர், புத்தகங்கட்டுவோர் முதலானோருடன் அவர்வரவை அங்குஆவலுடன் எதிர்பார்த்திருக்கும்போது, அவரும் தமதுவதனத்தில் புன்னகை தவழ, இருவிழிகளிலும் அன்பின் ஒளிபாவ, அச்சகபணியாளரிடையே நடந்துசென்றார். அத்தருணம் கொழும்புஅதிமேற்றிராணியாரும் அவருடன் சமூகமாயிருந்தார். அப்போது ஆண்டகைஅவர்கள் பேசியவிடத்து: உங்களைச்சந்தித்தமை நமக்குப் பேருவகை அளித்துள்ளது; "அச்சேற்றப்பட்ட விஷயம்" மிகமுக்கியத்துவமுடையது; நீங்கள் ஆற்றிவரும் பணியானது ஆசீர்வதிக்கப்பட்ட ஓர் அப்போஸ்தலதொண்டாகும்; ஏனெனில், அது தேவனுக்கென்று அர்ப்பணஞ்செய்யப்பெற்ற ஒருபணியாகுமெனக் கூறலாயினர். அதன்மேல் அவர்களையெல்லாம் அவர் ஆசீர்வதித்தார். அங்குசமூகமாயிருந்த ஒவ்வொருவரும் அவருடைய திருக்கணையாழியை முத்தமிடலானார்கள்.

### திருமணத் தங்கயூபிலி

யாழ்ப்பாணப் பெருந்தெருவிலே 'ஆரிய லொட்ஜ்'எனும்மனையில் வசிப்பவர்களான அப்புக்காத்து ஸ்ரீ றெஜிஸ் இராசகாரியர்அவர்களும், அவரது தர்மபத்தினியும் தங்களது திருமண ஐம்பதாம்வருட தங்கயூபிலிவிழாவை நிகழும்ஐப்பசிமாதம் 17-ந்திகதி திங்கட்கிழமை கண்டுகளித்துக் கொண்டாடவிருக்கிறார்களென அறிகின்றோம். அன்றுகாலை6-30மணிக்கு யாழ்ப்பாணம், பரிசுதத அடைக்கலநாயகியின் திருஆலயத்தில் யூபிலித்தோத்திர பாடற்பூசை நிறைவேறுமெனவும், அதன்மேல் ஆலயபாடசாலைமண்டபத்தில் ஒருவரவே[illegible] பெறுமெனவும் [illegible]

# 12-ம்பத்திநாத பாப்பானவரின் பொன்மொழிகள்

தொகுப்பு: சா. பே.



காலஞ்சென்றபரிசுத்தபிதா12-ம் பத்திநாத பாப்பானவர் தமதுபத்தொன்பதுவருட ஞானஆளுகையிலும்ஏராளமான சொற்பொழிவுகளை நிகழ்த்தியிருக்கின்றார். இவைகள் அனைத்தும் அறிஞர்கள், அரசியல்வல்லுனர்கள், தத்துவநிபுணர்கள், முதலியோரால் பொருளாழமும், கருத்துச்செறிவும் நிறைந்த முத்துக்குவியல்களெனப் பாராட்டுதல்களைப் பெற்றிருக்கின்றன. அவர் காலஞ்சென்ற இரண்டாவதாண்டு நிகழும் ஐப்பசிமாதம் 9-ந்தேதி பூர்த்தியாகின்றது. அன்னாரின் நினைவு தினத்தையொட்டி அவர் நிகழ்த்திய சொற்பொழிவுகளிலிருந்து பொறுக்கியெடுக்கப்பட்டபொன்மொழிகள்சிலவற்றை ஈண்டுதருகின்றேம்.

### இரும்புத்திரையும் கட்டுப்பாடும்

தடைகளை அகற்றுங்கள், முள்வேலிகளையும், இரும்புத் தூண்களையும் அறுத்தெறியுங்கள், ஒவ்வொருநாட்டு மக்களுக்கும்தங்கள்அயல்நாட்டினரை அறிவதற்குப் பூரணசுதந்திரம் அளியுங்கள். அயலவன் எவ்விதம்வாழ்கிறான் என அறிவதற்குத் தடைவிதித்தல் கூடாது. நாகரீகஉலகிலிருந்து— சுதந்திரஉலகிலிருந்துசிலதேசங்கள் பிரித்துவைக்கப்பட்டிருக்கின்றன. சமாதானத்தை— சுதந்திரத்தை— மனிதஉரிமைகளை முன்னிட்டு அந்த இரும்புத்திரைகள் தகர்த்தெறியப்படவேண்டும்.

### இல்வாழ்க்கை

இன்றையஉலகம் குழந்தைப்பேற்றைச் சமுதாயத்துக்குப் பரிகாசம் விளைக்கும் ஒருசெயலெனக் கருதுகின்றது. ஒருகுடும்பத்தில் பலகுழந்தைகள் காணப்படுதல் குதூகலம்நிறைந்தவோர் நிகழ்ச்சி. ஆம், வாழ்நாள்முழுதும் அக்குழந்தை பலஇன்பநிகழ்ச்சிகளில் ஈடுபடுகின்றது. அக்குழவியைச் சுற்றியுள்ளோர்க்கும் அந்நிகழ்ச்சிகள் இன்பத்தையளிக்கின்றன. முதலில் ஞானமுழுக்கு, பின்னர் முதலநன்மை, உறுதிப்பூசுதல், பிறகுவருகின்றது திருமணதினம். இந்நிகழ்ச்சிகளை முன்னிட்டு அக்குடும்பத்தின் அங்கத்தினர்கள் அடிக்கடி ஒன்றுகூடுகின்றனர். அவர்களின் முகத்திலே எவ்வளவு மகிழ்ச்சி. அகத்தில் எவ்வளவுகளிப்பு.

### சனநாயகம்

இன்றைய ஆட்சிமுறைகளில் மக்களாட்சியைவிடச் சிறந்ததுவேறில்லை. பல்வேறுநாடுகளிலும் ஆழ்ந்தசோதனை கட்குப்பின் கண்டமுடிவு இதுவே. ஒவ்வோர்நாட்டின் கரங்களும் மேலும் மேலும் மற்றநாடுகளுடன் இணைவதைப்பார்க்குமிடத்து மக்களாட்சி இன்று எல்லாநாடுகட்கும் மிகஅவசியமென்பது தெளிவாகின்றது.

### மோட்டர்வண்டிகள்

சர்வதேசமோட்டர்கழகத்தின் ஒன்பதாவது மகாநாட்டிற்கு வந்திருந்த அங்கத்தினர்கள் முன்னிலையில் பேசியது: விஞ்ஞானஅறிவும், கலையுணர்ச்சியும் கலந்துருவாகிய ஒருபொருள் இந்தமோட்டர்வாகனம். ஒருமோட்டரின்எழிலை நாம்நோக்கும்போது அது எமதுஆன்மாவின் மகத்துவத்தை எமக்குப்புலனாக்கும். மோட்டர்ச்சாரதியின் கவனமான பாதுகாப்பிலும், திறமையான சவாரியிலும் அவ்வாகனம் தன் எழிலைக் கொண்டிருக்கிறது. எமது ஆன்மாவின் சாரதிகள் நாம்தான், எமதுகவனமான பாதுகாப்பிலும், திற[illegible]லும்மட்டுமே எமது [illegible]ன்எழிலில் தங்கியிருக்கிறது.

### தாய்க்குலம்

இத்தாலியமங்கையர் கழகத்தினரிடையே கூறியது: இறைவனது படைப்பின் சிறந்தஅம்சங்கள் பெண்கள். பெண்மையை நாகரீகஉலகு மதிக்கின்றது தாய்க்குலத்துக்குத் தனிச்சிறப்பளிக்கப்படும இன்றையஉலகிலே சிலதேசங்களில் யாமகாண்பதென்ன? முன்னேற்றத்தின்பெயரால் பெண்மையின் மென்மையை அவமதிக்குந்தன்மையில் பரிதாபத்துக்குரிய விதத்தில் அவர்களைக்காண்கிறோம். கப்பல்கட்டுகிறார்கள். சுரங்கங்களில் இரத்த வியர்வைசொட்டக் கருமமாற்றுகிறார்கள். ஆண்களே செய்வதற்கு அஞ்சும் பலவேலைகளைச் செய்யும்படி அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இதுதானா முன்னேற்றம்? பலநூற்றாண்டுகட்கு முன்னர் நடந்ததாக யாமகேள்விப்படும் அடிமையாட்சியை நோக்கியல்லவா அந்நாடுகள் போய்க்கொண்டு இருக்கின்றன.

### சமாதானம்

திரவியங்களை நிரம்பச்சேமித்து வைத்துக்கொள்வதினால் சமாதானம் நிரம்பிவழியுமெனத் தப்பபிப்பிராயம் கொண்டுள்ளவர்களைப்பற்றி யாம் அனுதாபப்படுகிறோம். இப்படித் தப்பபிப்பிராயத்தினால் ஏமாந்துபோகிறவர்களுக்குச் சமாதானத்தின் இலக்கணத்தை எடுத்துக்காட்டுவது அவசியம். தம்மிடையே மனவேற்றுமையின்றிச் சகிப்புத்தன்மையுடன் பலரும்ஒற்றுமைப்படுவதே உண்மையான சமாதானம் ஆகும்.

### அமைதி

அமைதியாய்இருக்கப் பழகுங்கள். அமைதியின்மை பலதுன்பங்களை, உடலுக்கும், உளத்துக்கும் வருவிக்கின்றது. அமைதி நமதுஆக்கைக்கு மட்டுமல்ல, ஆன்மாவுக்குமே உணவாகஅமைகின்றது. மனிதனைச் சாங்கோபாங்க சீவியத்தில் படிப்படியாக உயர்த்திக் கொண்டுபோவதும் அமைதியேயாகும்.

### ஏவாயுதங்கள்

பூமியை ஆளுங்கள்என இறைவன் மனிதனுக்கு உத்தரவளித்திருக்கிறார். ஆனால், பூமிக்குவெளியேசென்று நட்சத்திரங்களையும், சந்திரனையும் வெற்றிகொள்ள மனிதன்விரும்பினால் அதற்குத் தடைசொல்லப் போவதில்லை. ஆகவே, நீங்கள் உங்கள் ஆய்வுத்திறமையினால், நவீனவிஞ்ஞான வளர்ச்சியினால் ஏற்கெற்றுகளைக்கொண்டு இப்பிரபஞ்சத்தின் எல்லைக்கப்பாற்பட்டவைகளைக் கண்டுபிடிக்க — கிரகங்களை வெற்றிகொள்ள முற்படுவது முற்றிலும் நீதியானது புகழ்ச்சிக்குரியது. தம்மைச் சந்தித்த விஞ்ஞானிகள்சிலருக்குக் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு, சஞ்சூசையப்பர் கல்லூரிமைதானத்திலே கருதினல் அகஜியானியன் ஆண்டகையை வரவேற்றுக் கொழும்பு அதிமேற்றிராணியார் நிகழ்த்தியஉரை

கருதினல் ஆண்டகைஅவர்கள் லங்காவிலுள்ள கத்தோலிக்க திருச்சபையைத் தரிசிக்கவே இங்குவரலாயினர். மந்தையும், ஆடுகளுமாகிய இரண்டினையும் அவர் தரிசிக்கவந்திருக்கின்ருர். அவர்பேசுவதைக் கேட்கவென்று யாழ்ப்பாணமுதல் காலிவரைக்கத் திருச்சபையின் பிரதிநிதிகளாகக்கத்தோலிக்கமக்கள் இங்கு வந்திருக்கின்ருர்கள். இந்தவரவேற்பை ஒழுங்குபடுத்தியவர்களின் அழைப்பிற்கிசைந்து கத்தோலிக்கரான இராசியதூதுவர்கள்குழுவும் இவ்வரவேற்புவிழாவிற்குச் சமுகமளித்திருப்பதையிட்டு நாம மகிழ்வெய்துகின்ருேம். கத்தோலிக்கதிருச்சபையாகிய ஒரேகுடும்பத்தின் அங்கத்தினராய் இருப்பதிஞல்தான் இவர்கள் இன்று சாயந்தரம் இங்கு சமுகமளித்திருக்கின்ருர்கள். இராசீயதூதுவர் குழுவில் கத்தோலிக்கஅங்கத்தவர்களாயுள்ள இவர்கள் கத்தேலிக்க இலங்கையில் அந்நியர்கள் அல்ல. இவர்கள்எம்முடன் ஒன்றுபட்டிருக்கிருர்கள். வேதவிசுவாசத்தின் உடனஅங்கத்தவர்களென்ற மட்டிலே இங்குவந்திருக்கிருர்கள்.



கொழும்பு அதிமேற்றிராணியாரான
மகாமேன்மைதங்கிய
தோமஸ் கூறே ஆண்டவரவர்கள்

கடந்தகாலங்களிலே கத்தோலிக்கராகும்படியாய்ப் பலவந்தஞ்செய்யப்பட்ட மக்களின்சந்ததியாரே இலங்கைக் கத்தோலிக்கரென்ற கற்பனைஒன்றைத் தவருகவழிநடத்தப்படுவோர் கட்டிவிட்டிருக்கின்றனர். ஆனல், உண்மைஅதுவல்ல. இதுதான் உண்மை. தற்போதைய இலங்கைக் கத்தோலிக்கர்அநேகர் பழையவேதசாட்சிகளின் பரம்பரையினரே. ஆரம்பத்தில் இலங்கையை வெற்றிகொண்டவர்களாலே மக்கள் திருச்சபையில் சேர்ந்துகொள்ளுமாறு வலோற்காரம் செய்யப்பட்டார்களென்ற ஒருவிததர் அபிப்பிராயம் இன்று பரந்துள்ளது. அவ்விதம்நிகழவில்லையென்று நிரூபிக்க எம்மிடம் போந்தஅத்தாட்சி இருக்கின்றது. அக்கினி மட்குகைகளில் போட்டு அவர்கள் உபாதிக்கப்பட்டார்கள். இம்சித்துத்துன்புறுத்தப்பட்டார்கள். ஆனல், அவர்கள் புறங்காட்டவில்லை. வேதவிசுவாசத்தில் திடாரிக்கமாயிருந்தார்கள்.

பரிசுத்தபிதா பாப்பரசரும், மேற்றிராணிமாரும் திருச்சபையின் காணப்படும் சிரசாவர். விசுவாசிகள் அதன் உடலாவர். உடலின்றிச் சிரசுஉயிர்வாழமுடியாது. சிரசின்றி உடல்உயிர்வாழமுடியாது. பரிசுத்தபிதாவும், மேற்றிராணிமாருமாகிய சிரசுக்கும், விசுவாசிகளாகிய உடலுக்குமிடையே பிளவை உண்டுபண்ணிவிடச் சில விரோதிகள் முயன்றுவருகிருர்கள். "ஒருசில பிறநாடுகளில் ஊக்கமாக ஈடுபட்டுவந்த அதேபலங்கள் இலங்கையிலும் இப்போது தலைகாட்டிக்கொண்டிருக்கின்றன." ஆகவே,முன்னெச்சரிக்கையாய் இருங்கள்! உடலிலிருந்து சிரசைப்பிரித்துவிடுமாறு திருச்சபைவிரோதிகளாலே இன்று சதியான தந்திரோபாயங்கள் கையாளப்பட்டு வருகின்றன. "உடலிலிருந்து சிரசைப் பிரித்துவிடுங்கள். எல்லாம்நிலைகுலைந்து பரிநாசமாகிறது" என்பதை அவர்கள் நன்கறிவார்கள்.

இப்போது அங்கலாய்ப்பும், கவலையும்தருவதான ஒருகாலம் நம்மை எதிர்கொண்டிருக்கிறது. ஏனெனில், நாம் மிகமிகஅருமைபாராட்டிப் போஷித்து வளர்த்துப் பரிபாலித்துவந்த ஒன்றை—அதாவது கத்தோலிக்கபிள்ளைகளின் கல்வியை — ஆபத்து எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. அங்கலாய்ப்புக்குரிய அநேககாரியங்கள் நம்மைப் பளுவாகத் தாக்குகின்றன. அவர்கள் நமதுபிள்ளைகளிலே கைவைக்கிருர்கள்; ஆனல், நமக்குஎதுவுஞ் செய்யவில்லையென்று சொல்லுகிருர்கள். ஆயினும், "நரகத்தின்வாயில்கள் அதனை மேற்கொள்ளமாட்டா" என்ற கிறீஸ்துநாதரின் திருவாக்குகளிலிருந்து நாம் உற்சாகமூட்டப்பட்டவர்களாய் இந்தச் சோதனைகளை வீரத்துவமாக எதிர்கொண்டுநிற்கிருேம. சத்தியம் தாக்கப்படுகிறது. துன்புறுத்தப்படுகிறது. உண்மையானதிருச்சபையின் அறிகுறி இந்தத்துன்புறுத்துதலாகிய வேதகலாபனையில்தான் காணப்படுகின்றது. ஆகவே, அதிகபலமாயும், உறுதியாயும் உங்களைஸ்திரப்படுத்திக்கொள்ளுங்கள். வார்த்தைகளில் மாத்திரமல்ல, செயல்களிலும் உங்கள்விசுவாச பிரமாணிக்கத்தைக் காண்பியுங்கள். நம்முடைய வேதவிசுவாசம் நமது பிறத்தியார்மட்டில் நாம்காண்பிக்கும் பிறர்சிநேகத்தில் மலர்ந்து கனிகளைத் தாங்கவேண்டும்.

நமது முதற்கடமை, நமதுஅயலார் மட்டில் அன்புடையவர்களாய் இருப்பதே. உங்கள்பிறத்தியாரை நேசியுங்கள். உங்கள்அயலார் உங்களுக்குத் தீங்குசெய்யவேண்டுமென்று விரும்பினல் நீங்களும் அவர்களுக்குத் தீங்குசெய்ய வேண்டுமென்றுவிரும்புவது நியாயமல்ல; நன்மையே எப்போதும் தீமையை வெற்றிகொண்டுள்ளது. திருச்சபையின் பிறர்சிநேகமே இறுதியில் வெற்றிகொள்ளும். பிறர்சிநேகமே சேமமாய் உங்களைக்காத்துவைக்கும்.

## மதமும் வாழ்வும்

சமயமும், சீவியமும் வேருனவை; இயற்கையும், இயற்கையைக் கடந்தவைகளும் வெவ்வேறு; திருச்சபைக்கும், உலகத்துக்கும் தொடர்பில்லை என்றெல்லாம் பிரித்துக்காட்டுவது இறைவனுக்கும், மனிதனுக்கும் தொடர்பில்லைஎனக் காட்டுதற்குச்சமன். மனிதனதுவாழ்வின் ஒவ்வோர்பகுதியிலும் இறைவன் இடம்பெறுகின்ருர். மனிதனின் நல்வாழ்விற்கு வழிகாட்டுவதே மதம். இதுவே கிறிஸ்துவத்துவம்.

## சுவிசேஷ வியாக்கியானக் குறிப்புகள்

— B. W. J. —

### 19. தண்ணீரை இரசமாக்கினது — அரு. II. 1-12

**(1) மூன்ரும்நாளிலே** (1) — அதாவது கலிலேயாவுக்குப் புறப்பட்ட மூன்ரும்நாளிலே (18-ம் இல. 3-ம் குறிப்புக் காண்க).

**(2) யேசுநாதரும்** (2) — இந்தக் கலியாணத்தில் யேசு மரியாயோடு இருந்து குடும்பசீவியத்தில் பங்குபற்றுகிருர். ஆனல், இந்தக் கலியாணத்தில் செய்த புதுமையோடு தமது பகிரங்க சீவியத்தைத் தொடங்குகிருர். அவர் கலியாணத்திற்குச் சமுகம் கொடுப்பதிஞல் அதை ஆசீர்வதித்து ஓர் திருஅனுமானநிலைக்கு உயர்த்தும் எண்ணத்தைக் காண்பிக்கிருர்.

**(3) அவர்களுக்கு இரசமில்லை** (3) — யூதருடைய கலியாணத்தில் இரசமில்லாமல்போவது ஒருபெரிய சங்கையீனம். வறியவர்களும் கலியாணத்திற்காக இரசம் கவனத்தோடு சேர்த்துவைப்பார்கள். இந்தக் கலியாணத்தில் சிலபேர் காத்திராப்பிரகாரம் வந்தபடியால் இரசம் குறைந்திருக்கக்கூடும். மரியாய் இதைக் கவனித்து இரகசியமாய் யேசுவுக்கு அறிவித்ததில் அவளுடைய பிறர்சிநேகம் காணப்படுகிறது.

**(4) ஸ்திரியே! எனக்கும் உமக்கும் என்ன?** (4) — அதாவது "புதுமை செய்வது எனது இரட்சணிய அலுவலைச் சேர்ந்தது; அந்த அலுவல் தொடங்குகிற காலம் என்னம் வரவில்லை; ஆகையால், நீரும் நானும் ஏன் அதைப்பற்றிப் பேசுவான்?" இப்படிச் சொன்னபின் மரியாய் சயிக்கினையினல் தனது வேண்டுதலுக்கு இணங்கும்படி மன்ருடி இருக்கவேண்டும். அதற்கு யேசுவும் சயிக்கினையாலே சம்மதித்திருக்கவேண்டும். ஆகையால் தான் மரியாய் பணிவிடைக்காரரை நோக்கி யேசு சொல்லுகிறபடி செய்யுங்கள் என்ருள். இந்தச் சம்பவம் மரியாயின் வேண்டுதலின் வல்லமையைக் காட்டுகின்றது ஏனெனில், யேசு தமது இரட்சணிய அலுவலின் தொடக்கத்தை மரியாய்க்காக முன்போட்டார்.

"ஸ்திரீயே" என்பது யூதருக்குள் "நாயகியே" என்பதைப்போல மரியாதையான ஒருசொல்லு. இதை யேசு சிலுவையில் பலியாகும்பொழுதும் பாவித்தார். மரியாய் தனது வேண்டுதலினல் இரட்சணியஅலுவல் தொடங்குவதிலும், தனது வியாகுலத்தால் சிலுவைப்பலி செலுத்துவதிலும் பங்குபற்றின அந்த இருதருணங்களும் மிகவும் காத்திரமானவை. ஆகையால், அந்தத் தருணங்களில் யேசுநாதர் சாத்தானுடைய தலையை நசுக்கும் ஸ்திரீயைப்பற்றிச் சொல்லப்பட்டதை நினைத்து (ஆதி. iii. 15) மரியாய்தான் அந்த ஸ்திரீ என்று காட்டும்படி அந்தச் சொல்லைப் பாவித்திருக்கலாம்.

**(5) பந்தித்தலைவன்** (9) — சபை நடத்துகிறது மாத்திரமல்ல, இரசத்தினதும் போசனத்தினதும் உரிசி பார்ப்பதும் இவருடைய அலுவல். அப்படி உரிசிபார்த்தபடியால் புதுமையின் திறமைக்குச் சாட்சியாக இருந்தார்.

**(6) அற்புதங்கள்** (11) — அருளப்பர் யேசுவின் ஏழு அற்புதங்களை மாத்திரம் கொடுப்பதினுலும், அவைகளை "அடையாளங்கள்" (ii. 18; vi. 30) என்கிறபடியினுலும், சிலவேதவிரோதிகள் அவர் புதுமைகளையல்ல, ஒட்டுவமைகளையே எழுதினர் என்கிருர்கள். ஆனல், அருளப்பர் மற்றச் சுவிசேஷகார்களைப் போலத்தான் யேசுவின் புதுமைகளை அடையாளங்கள் என்று சொன்னுலும் (மத். xii. 38; மாற். viii. 12; லூக். xxiii. 8), அவைகளைத் தெளிவான சரித்திர முறையாகவே எழுதுகிருர். மேலும் அவர் தனது சுவிசேஷத்தின் முதல்அதிகாரத்திலே ஏழுநாட்களை ஒருவிசேஷகருத்துடன் எடுத்துச்சொன்னமாதிரி (18-ம் இல. 3-ம் குறிப்புக் காண்க), தன்னுடைய சுவிசேஷத்தில் தொடர்ந்துவரும் மற்ற அதிகாரங்களில் ஏழு புதுமைகளையும் ஏழு திரு அனுமானங்களின் அடையாளங்களாகக் கொடுத்திருக்கலாம்.

**உதாரணமாக:** (1) தண்ணீரை இரசமாக்கினதைக் கலியாணம் ஒரு திருஅனுமானமாக்கப்பட்டதிற்கும், (2) சிற்றரசனுடையமகனைப் பிழைக்கப்பண்ணினதை ஞானஸ்நானத்தில் பிரசாத உயிரைக் கொடுப்பதற்கும், (3) பெசதாப் பாவியின் வருத்தத்தைக் குணமாக்கினதைப் பச்சாத்தாபத்தால் பாவத்தை மன்னிப்பதற்கும், (4) புதுமை அப்பத்தால் உணவூட்டினதை நற்கருணை தரும் ஞானபோசனத்திற்கும், (5) கடலின்மேல் நடந்து சீஷரின் விசுவாசத்தை ஸ்திரப்படுத்தினதைக் குருத்துவத்தின் பிரசாதத்திற்கும், (6) பிறவிக்குருடனுக்குப் பார்வைகொடுத்ததை உறுதிப்பூசுதலினல் வரும் விசுவாசத் திடனுக்கும், (7) லாசறஸை உயிர்ப்பித்ததை அவஸ்தைப்பூசுதலினல் வரும் உத்தானத்தில் நம்பிக்கைக்கும் அடையாளங்களாக அருளப்பர் எண்ணியிருக்கலாம். இதனல் அவைகள் புதுமைகளல்ல என்று சொல்வதற்கு நியாயமில்லை.

**(7) அவர்மேல் விசுவாசம்** (11) — முந்தியே சீஷர்கள் யேசுவை விசுவசித்தார்கள். ஆனல், இந்தப் புதுமைகளின் பின்பு அவர்களுடைய விசுவாசம் கூடினது.

**(8) கப்பர்நாவு** (12) — இது கலிலேயா ஏரியின் வடமேற்குக் கரையில் இருப்பதும், நசரேத்திலிருந்து 25 மைல் தூரமுமான ஒருகிராமம். யேசு இதைத் தமது கலிலேயாநாட்டுப் போதனைக்கு மையமாகத் தெரிந்தபின் பாஸ்குத்திருநாளுக்காக ஜெருசலேமுக்குப் போனர்.

## சந்நியாச தங்கயூபிலி

முன்னர் கொழும்பு, சிலாப மேற்றிராசனங்களில் நெடுங்காலம் தேவதொண்டு, கல்வித்தொண்டு ஆற்றிவந்தவரும், தற்போது மாத்தளை மரியாயின் பிரான்சீஸ்கன் சந்நியாசர்கள்சபைச் சிரேஷ்ட அதிபராய் இருந்துவருகிற வருமான அதிசங். பிரான்சிஸ் சேவியர் சகோதரர்அவர்களின் சந்நியாச ஐம்பதாம்வருட தங்கயூபிலிவிழா நிகழும்ஐப்பசிமாதம் 8-ந்திகதியாகிய வருகிறசனிக்கிழமையன்று மாத்தளையிலுள்ள சபையின்தாய்மடத்திலே கொண்டாடப்படவிருக்கிறது. அன்று காலை 6-30மணிக்குக் கண்டிமேற்றிராணியாண்டவர் யூபிலித்தோத்திரபாடற்பூசை நிறைவேற்றுவார். யூபிலிநாயகரிடம் இதுவரை ஆன்ம,சரீரநன்மைகள் அடைந்துள்ள அனைவரும் அன்று தினம் அவருடன்சேர்ந்து தேவனுக்கு நன்றியறிந்ததோத்திரம் செலுத்தும்படியாகவும், மற்றும்வைபவங்களில் கலந்துகொள்ளும்படியாகவும் பரிவாகக் கேட்டுக்கொள்ளப்படுகின்ருர்கள்.

## பாடசாலைப் பேச்சுப்போட்டி

வடமராட்சித் தமிழாசிரியர்சங்கத்தால் சென்ற24-9-60சனிக்கிழமை நடத்தப்பட்ட பாடசாலைப் பேச்சுப் போட்டியிலே கீழ்ப்பிரிவு பெண்கள் பிரிவிலே வல்வெட்டித்துறைக் கத்தோலிக்கபாடசாலை மாணவி செல்வி ம. லூர்துமலர் ஞானேஸ்வரி முதலாம் பரிசுபெற்றுள்ளார். —நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

**அன்புமிக்க இளைஞர்களே !**

உங்களையிட்டுத் தற்போது நடந்துகொண்டிருக்கும் மாபெரிய போரொன்றைப்பற்றி எப்போதாகிலும்சிந்தித்திருக்கிறீர்களா? உங்களைப்பெற்றெடுத்தவர்களுடைய உரிமையைப் பறித்தெடுக்கும் செயலொன்றைச் சிலர்செய்ய முயன்றுகொண்டிருக்கின்றனர். தாங்கள் பெற்றபிள்ளைகளை விரும்பியபடி பெற்றோர் கல்விகற்பிக்கும் உரிமையை இல்லாமல் ஆக்கும் செயல்இது. சமயபள்ளிக்கூடங்கள் இல்லாதுபோக, யாவும் அரசாங்க பாடசாலைகளாக்கப்பட்டு அவ்விடமே எல்லாப்பிள்ளைகளும் கல்விகற்க வேண்டுமென்றும், ஒவ்வோர் சமயத்துப் பிள்ளைகளுக்கும் அங்குதத்தம் சமயபாடம் படிப்பிக்கப்படுமென்றும் வாதாடுகின்றனர் அவர்கள்.

ஏதோ இயந்திரத்தில்போட்டு மினுக்கப்படும் தானியத்தைப்போல, பிள்ளைகளையும் விரும்பிய எந்தப்பாடசாலையிலுமிட்டுப் பயிற்றியெடுக்க அவர்கள் முயலுகிறார்கள். இச்செயலில் அடங்கியிருக்கும் பெரியதப்பிதத்தை உணருகிறீர்களா?

மற்றமற்றப் பாடங்களைப் படிப்பது அறிவிற்காக மாத்திரமே. ஆனால், சமயபாடத்தைப் படிப்பதோ அதைச் சீவிப்பதற்காக, பாடத்தைப்படித்துவிட்டு அதைச் சீவிக்கஇயலாத சூழலில் வைக்கப்படும் மாணவர்கள், இனிதே கனிகொடுத்து, செழிப்பாய்த் தோட்டத்தில் வளர்ந்துவரும்போது வேருடன் பெயர்த்தெடுபட்டுப் பாறையின்மேல் ஏற்றப்பட்ட மரத்திற்கு ஒப்பாகிறார்கள். பாறையின்மேல் மரமானது தனக்குரிய சூழலாகும் தண்ணீர், பசளை பராமரிப்பு முதலியவற்றைக் காணாததினால் சீக்கிரம் வாடிவதங்கி உயிரற்று விடுமன்றோ.

உங்களது சரீரத்தின் சீவியம் பெரிதல்ல. அதிலும் மேன்மை பொருந்திய ஆன்மாவின் சுகசீவியமே காத்திரமானது. சரீரசுகத்தைப் பேணுவதற்காய் ஒருநாளில் மும்முறை உண்ணவும், நாளாந்தம் ஸ்நானம் செய்யவும், வைத்திய ஆலோசனை கேட்கவும், சுகாதாரமுறைகளைக் கவனிக்கவும் தவறமாட்டீர்கள். அப்படியாயின், உங்களது ஆன்மசுகத்தைப் பேணுவதற்காக நடத்தப்படும் சமயபாடசாலைகள் உங்களுக்கு அளிக்கும் உகந்தசூழலைப் பறிமுதலாக்கும் செயல் எத்தரமானதோ?

நோய்வாய்ப்பட்டு, படுக்கையாய்க்கிடக்கும் உங்கள்உயிரைக் காப்பாற்றுவதற்கு என்னென்ன கஷ்டங்களைப் பெற்றோர் அனுபவிக்கத் தயாராயிருக்கிறார்கள். அதில் ஒருபங்கைத்தானும் உங்கள் ஆன்மசேமத்திற்காய்ப்பட முன்வரமாட்டார்களா? சம்பளஉயர்ச்சி, இலவச பிரயாணவசதி, தத்தம் சொகுசு இவை போன்ற அற்பநன்மைகளைக்கருதி உங்களது அழியாதஆன்மாவின் நன்மையை மறந்து விடுவார்களா?

"கற்றதினாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாடொழா அரெனின்"

—( )—

## சுவிசேஷ சிந்தனை

### "குருவே! தேவகட்டளையில் மிகப்பெரிய கற்பனைஎது?"
### (மத். 22: 34 – 46)

பரிசேயர் நமது ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதர் மிகவும்வீரியத்துடன் போதிக்கிறார்என்று பொறாமைப்பட்டார்கள். சனங்கள் இவரின் அருள்போதனைகளைப் பின்பற்றித் தங்களைமதியாமல் இவருக்கு மரியாதையும், வணக்கமும் செலுத்துகிறார்களென்று கோபமடைந்தார்கள். எவ்விதத்திலும் இவரை அடக்கவேண்டுமென்றும், இவரின் போதனையில் பிழைபிடிக்க வேண்டுமென்றும் இவரைச் சோதிக்கும்படியாகப் பலதடவைகளில் இவரைஅணுகிப் பலமுரட்டுக் கேள்விகளைக் கேட்டார்கள். சகல ஞானமும் பொருந்தியதேவனை அல்லவா அற்பசிருஷ்டிகளாகிய மனிதர் சோதித்தார்கள். யேசுநாதர் தமதுஞானத்தினால் எல்லாவற்றிற்கும் தகுந்தவிதமான மறுமொழிகொடுத்து வாய்களை அடைக்கச்செய்தார். ஒருமுறை ஒருநீதிசாஸ்திரி அவரைஅணுகிக் கேட்டதாவது: குருவே! தேவகட்டளையில் மிகப்பெரிய கற்பனைஎது?" யேசுநாதர் மறுமொழியாக, உன் தேவனாகிய ஆண்டவரை உன்முழு இருதயத்தோடும், உன்முழு ஆத்துமத்தோடும், முழுமனதோடும் சிநேகிப்பாயாக. பிரதானமும், முதன்மையுமான கற்பனை இதுவே. ஆயினும், உன்னைப்போல உன்பிறத்தியானையும் நேசிப்பாயாக என்கிற இரண்டாம் கற்பனையும் இதற்கு ஒத்ததாம்.

ஆகையால், நாம் கண்ணினால்காணாத தெய்வத்தை நேசிப்பதற்கு அத்தாட்சியாக நம்முடன் இவ்வுலகில் இருக்கும் நம் அயலவரை நேசிப்பதுதான். நீங்கள் பிறரைநேசித்தால் தேவனைநேசிப்பதற்குச் சந்தேகமில்லை.

## உறுதிவாக்காளர் பகுதி

1. பின்வரும் உறுதிவாக்காளர் இம்மாதம் தங்களது பிறந்தநாளைக் கொண்டாடுவார்கள். இளைஞர் பக்கம் அவர்களுக்குத் தேவஆசியையும், நற்சித்தியையும்விரும்புகின்றது.

28. ஆர். ரீ. பி. அந்தோனிசாமி, (ஐப்பசி 28.)
35. ஜீ. எம். ஞானப்பிரகாசம், (ஐப்பசி 12.)
42. நீற்று யோசேப், (ஐப்பசி 15.)

2 புதிய வாக்காளர்

44. எனசி வியோனு கமீல் செபஸ்தியாம்பிள்ளை, — புத்தளம்.
45. ஜே. ரி. பற்றிக் அலெக்ஸ்சான்டர் தோமஸ், — வின்டுலா.
46. டீ. தேவசகாயம், — மகாஊவா.

3. பரிசு உரிமை

செல்வி மேரிறோசலீன் குசைசப்பிள்ளை இளைஞர்பக்கத்திற்கு ஐந்து கடிதங்கள் பிரசுரிப்பதற் கேற்றவாறு வழங்கியதின்நிமித்தம் பரிசுக்குரிமை பெறலாயினர். அவவினதுபரிசு சீக்கிரம் அனுப்பிவைக்கப்படும்.

● பெரிய காரியங்களைச் செய்வதற்கே நான் பிறந்தேன்.
— அர்ச். ஸ்ரனிஸ்லாஸ்

# பிரிந்தவர் கூடினர்

(செல்வி லூட்ஸ் அருளானந்தம்)

ஈரிரண்டாண்டுகளாக இன்பமுடன் வாழ்க்கைப்படகை ஓட்டினர் எலனும், எற்மனும். ஆனால், நான்காண்டுகளாகியும் பிள்ளைகள் ஒன்றும் கிடைக்கவில்லையே என்ற கவலை அவர்களை வாட்டிவதைத்தது.

அல்லற்படுவோரை அன்புடன் அரவணைத்து ஆறுதல்கொடுக்கும் அன்னைமரியின் துணையை நாடினர் எலனும், எற்மனும். தினமும் அந்திவேளை அமலஅன்னையின் ஆலயத்தையடைந்து பக்தியுடன் வேண்டினர். நேர்த்திக்கடன்கள் சிலசெய்தனர். பன்னிருதிங்கள் கழிந்தன. எலன் ஓர்ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். அன்பும், அழகும் ஒருங்கே அமையப் பெற்ற புதல்வனைக்கண்டு எற்மனின் சிந்தை களிப்பெய்தியது. அமல அன்னைக்கு அடங்காமகிழ்வுடன் தம் அகம்நிறைந்த நன்றியறிதலைச் சமர்ப்பித்துத் தேவதாயின் கருணையால் கிடைக்கப்பெற்ற புதல்வனை அவவின் அடைக்கலத்தில் காணிக்கையாக்கி இவ்வுலகை விட்டுநீங்கும் வரையும் தம்புதல்வனைப் பேணிக்காக்கும்படி விண்ணப்பஞ் செய்தனர். ஈற்றில் தமதன்புப்புதல்வனுக்கு அமலதாசன் என்றநாமஞ் சூட்டினர். எலனும், எற்மனும் தம் புதல்வனைக் கண்ணின்கருமணிபோல் பேணிக்காத்தனர். நாளொருவண்ணமும், பொழுதொருமேனியுமாக வளர்ச்சியடைந்த அமலதாசன் பக்தியிலும், புத்தியிலும், கல்வியிலும், சீரிய ஒழுக்கங்களிலும் சிறந்தநற்குணசீலனாய் வளர்ந்து வருவதைக் கண்ட அமலதாசனின் அன்னையும், தந்தையும் இறுமாப்படைந்தனர். அமலதாசன் பள்ளிச்சிறுவனானான். எற்மன் தன்னூரிலுள்ள கத்கத்தோலிக்க பாடசாலையில் கல்வி பயிலத் தம்புதல்வனை அனுப்பிவைத்தார்.

அமலதாசன் ஐந்துபராயப் பையனாக இருக்கும்போது அமலநாயகி அவனுடைய அன்புத்தங்கையாகப் பிறந்தாள். ஒருபிள்ளை இல்லைஎன்று வருந்திய தமக்கு இருகுழந்தைகளைத் தேவதாயார் அருளியமையைக் கண்டு எலனும், எற்மனும் எல்லையில்லாத இன்பக்கடலில் மூழ்கினர். அமல அன்னைக்கு எவ்விதம் நன்றிகூறுவதென்றே புரியாதுபோயினர். அமலதாசனை மரியன்னையின் அரவணைப்பில் அன்புக் காணிக்கையாக்கியதுபோல் அமலநாயகியையும் அவவின் அடைக்கலத்தில்ஒப்படைத்துத் தமது நன்றியைச் செலுத்தினர். அமலநாயகி ஜனனமானதிலிருந்து எற்மனின் குடும்பத்தில் அன்னைமரியின் ஆசிரும் நிறைவாகப் பொழியப்பட்டன, அமல அன்னைமேலிருந்த அன்பும் எற்மன் குடும்பத்தில் ஆல்போல் தளைத்தோங்கியது. அமலநாயகி பிறந்து ஓராண்டு பூர்த்தியாயிற்று.

எற்மனும் எலனும் தூரஇடத்திலுள்ள "பாலியரின் அடைக்கல நாயகி" ஆலயத்திருநாளில் பங்குபற்றித் தமது நேர்த்திக்கடனை நிறைவேற்ற வேண்டியதாக இருந்தது. தைத்திங்கள் பதினான்காம் தினம் எற்மன் குடும்பம் கடலில் கப்பல் ஏறித் தமது பிரயாணத்தை ஆரம்பித்தனர். இருவாரங்கள் கடந்ததும் கப்பல் சேரவேண்டிய இடத்தையடைந்தது. எற்மனும் எலனும் தம்மிரு புதல்வருடன் கூடப் பொருட்களையும் வெளியே எடுத்து வந்து அங்குநின்ற மோட்டார்இரதம் ஒன்றில் ஏறிச்சென்று ஆலயத்தையடைந்தனர். பல்லாயிரக்கணக்கான சிறுவர்களும், பெரியவர்களும் குழுமியிருந்தனர். எற்மன் குடும்பத்தினர் இருவாரங்கள் அவ்வாலய வளவில் அமைந்துள்ள விடுதிச்சாலையில் தங்கித் தமது நேர்த்திக்கடனை உள்ளப் பூரிப்புடன் அன்னைமரியின் ஆலயத்தில் நிறைவேற்றிவிட்டுத் தமது குடும்பத்தினரை அன்னைமரியின் அடைக்கலத்தில் ஒப்படைத்துத் தம் தாய்நாடு திரும்பினர். அவர்கள்வந்த கப்பல் மிகப்பெரிதாகவிருந்தது. அக்கப்பலில் அநேக சிறுவர்கள் பிரயாணஞ்செய்து கொண்டிருந்தனர். அக்கப்பல் ஓரிடத்தில் தரித்துநின்றதும் அதில் பிரயாணஞ் செய்தவர்களில் அநேகசிறுவர்களும், பெரியவர்களும் கப்பலைவிட்டிறங்கித் தத்தம்ஊரை நாடிச் செல்லலாயினர். அவ்வேளை எற்மனின் அருமைப்புதல்வன் அமலதாசனும் அங்குபிரயாணஞ்செய்த சிறுவர்களுடன் கப்பலைவிட்டிறங்கி அவர்களோடு கூடச் சென்றுவிட்டான். இதை எற்மனும், எலனும் அவதானிக்கவில்லை. அமலதாசன் சென்ற சிலமணித்தியாலங்களின் பின்னர் எற்மனும், எலனும் அமலதாசனைக் கப்பலெங்கும் தேடினர். காணவில்லை. கப்பலில் பிரயாணஞ் செய்தவர்களனைவரிடமும் வினவினர். ஒருவரும் தாம்காணவில்லையெனப் பதிலிறுத்தனர். எலனும், எற்மனும் அருமைப்புதல்வன் அமலதாசனைக்காணாமல் ஆறாத்துயரடைந்தனர். கப்பலில் இருந்துகொண்டே செபமாலைஓதினர். மரியன்னையிடம் தங்கள் புதல்வனைக் காப்பாற்றித்தரும்படி வேண்டுதல் செய்தனர். ஒருவாரம்கழிந்ததும் கப்பல் எற்மனின்ஊரை அடைந்தது. எல்லோரும் கப்பலைவிட்டிறங்கினர். எலனும், எற்மனும் மரியநாயகியையும் அழைத்துக்கொண்டு தம் பொருட்களுடன் அருமைப் புதல்வனையிழந்த சோகத்துடன் கால்கள் சோர்வடையக் கண்ணீர்சிந்தியவாறு தம்இல்லம் அடைந்தனர். அமலதாசனின்மையால் அவ்வில்லம் பொலிவிழந்து காட்சியளித்தது. எற்மன் பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி மூலமெல்லாம் தமதருமைப்புதல்வன் காணாமல்போய் விட்டதாகவும், கண்டுபிடித்துத் தம்மிடம் ஒப்புவிப்பவர்களுக்குத்தகுந்த சன்மானமளிப்பதாகவும் விளம்பரப்படுத்தினர். எல்லாம் முயற்கொம்பாகி விட்டன.

ஆண்டுகள் பலகடந்தன. மரியநாயகி அவ்வூரிலுள்ள பாடசாலையில் கல்விபயின்று பத்தாவதுவகுப்புப் பரீட்சையில் தேர்ச்சியடைந்தாள். எற்மனும், எலனும் மகிழ்ச்சிவெள்ளத்தில் மூழ்கினர். மரியநாயகி தொடர்ந்து உயர்தரக்கல்வி பயில்வதையே எலனும், எற்மனும் ஆசித்தனர். ஆனால், தெய்வபக்தியும், சீரிய நற்குணங்களும்படைத்த மரியநாயகி தன்கல்விக்கு முற்றுப்புள்ளிவைத்துவிட்டுத் தேவனுக்கு அன்புப்பணிபுரியக் கன்னிகாமடம்செல்ல ஆசித்தாள். தனதுஆவலைத் தன் அன்புத் தந்தையும், அன்னையும்கேட்டால் ஒருவேளை கவலையடைந்து தன்ஆவலை நிறைவேற்றத் தடைவிதிப்பரோவென எண்ணிப் பீதியடைந்தாள். அன்னைமரியின்மேல்தனதுநம்பிக்கை முழுவதையும் வைத்துக்கொண்டு ஓர் தினம் தன்அன்னையும், தந்தையும் ஒன்றாகஇருக்கும்போது தன்ஆவலை வெளியிட்டாள். எற்மன் தன்புதல்வியின் வேண்டுகோளை மறுத்தார். எலன் தனதருமைப்புதல்வியை அன்புடன் முத்தமிட்டு அவளிஷ்டப்படி செல்லஉடன்பட்டாள். தந்தையின் மறுப்பையிட்டுக்கலங்கியமரியநாயகி அன்னையின் அன்புமொழிகேட்டு உவகைகொண்டாள். எலன் தன்

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

அருமைத் தம்பி, தங்கையரே!

'பெரியோரைக் கனம்பண்ணு' என்பது முதுமொழி. எமக்கு வயதில் மூத்தவர்கள், எமது ஆசிரியர், குருமார், பெற்ருேர், வயோதிபர் யாவரையும் கனம்பண்ணவேண்டும். அவர்களுக்கு மரியாதை காண்பிக்கவேண்டும். "இப்பழக்கம் இன்று குடும்பங்களில் அருகிவருகின்றது; பாடசாலைகளில் இப்பழக்கம் குன்றிவிட்டது" என்று பலர் குறை கூறுகின்றனர் இக்குறைக்கு நீங்கள் இடம் வைக்கக்கூடாது, உங்கள் ஆசிரியரை, ஆசிரியையை வழியிலாவது, கோவிலிலாவது, வேறு எங்காவது கண்டவுடன் அவர்களுக்கு மரியாதைகாட்டும் நற்பண்பு ஏன் அருகவேண்டும்? காலை, மாலை வந்தனங்களைச் சொல்ல ஏன் கூசவேண்டும்? அவர்களைக் கண்டவுடன் ஏன் ஒளித்தோடவேண்டும்? தமிழ்நாட்டின் குருபக்தி ஏன் இப்படிக் குன்றவேண்டும்? முன்னர் எமது வீடுகளிலே ஆசனங்களில் பெரியோர், பெற்ருேருடன் சிறுவர்கள் சரிசமமாய் உட்காரமாட்டார்கள். இன்று அப்படி நடக்கிறதா? தகப்பன் வந்தாலும் மகன் இருந்த இடம்விட்டு எழுந்து நின்று மரியாதை செய்யமாட்டான், வீட்டில் இருக்கும் பெரியோர், வயோதிபருக்குக் கிஞ்சித்தும் மரியாதை காட்டமாட்டார்கள். கேவலமாக வாய்க்குவாய் காட்டுவர். பெரியோர் சம்பாஷிக்கும்போது தாங்களும் வந்து கதைகேட்பர். வழியிலே, தெருவிலே காணப்படும் பிச்சைக்காரர், நொண்டி, சப்பாணிகள், பைத்தியக்காரரை ஏளனம்செய்து, நாயை அவர்களிடம் விரட்டி, இன்னும் எத்தனையோ இழிவான செயல்களைச் செய்யும் குறும்புச் சிறுவரைக் கண்டால் எவ்வளவு சகிக்க முடியாத மனவருத்தம் உண்டாகின்றது. இவ்விதம் நீங்கள் செய்யக்கூடாது, இது பிறர்சிநேகத்துக்கு விரோதம். நற்பண்புகளை இப்போதே நீங்கள் கற்றுக்கொள்ளவேண்டும். உங்களைப் பயிற்றிய பழைய ஆசிரியரைக் காணும்போது அவர்களுக்கு மரியாதையும், நன்றியும் காண்பிக்கவேண்டியது உங்கள் கடமை. இனிமேலாவது இங்கு குறிப்பிட்டவைகளைக் கண்டிப்பாக அனுசரிக்க முயன்றுவாருங்கள். பெரியோரை மதித்து, அவர்களுக்கு உதவிசெய்ய இப்போதே பயின்றுகொள்ளுங்கள்.

அண்ணு.

## அன்பு

கடவுள் மனிதருக்குக் கொடுத்துள்ள அரும் குணதிசயங்களில் தலைசிறந்தது அன்பு. இது நெஞ்சோடு நெஞ்சையும், உயிரோடு உயிரையும் பிணைக்கும் ஓர் ஞானவடம். போராட்டமான வாழ்க்கையில் அமைதியை நிலைநாட்டும். கரடுமுரடான கற்பாதைகளும், முட்கள் நிறைந்த காட்டுப் பாதைகளும் போன்ற வாழ்வையும் நல்வழிப்படுத்த உதவிபுரியும் சக்தி நிறைந்ததுதான் அன்பு.

அன்பு அகங்காரத்தை அகற்றும். அறியாமையை அழிக்கும். இன்பத்தை இலகுவிலே மனதில் பரவச்செய்யும். அன்பில்லாதவர்கள் அகந்தை, அழுக்காறு உடையவர்களாயும், கீழ்ப்படியும் குணம் அற்றவர்களாயும் இருப்பார்கள். இருண்ட வாழ்வில் விளக்குப்போல் அன்பு ஒளிகொடுக்கும்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்;
அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு".

திருவள்ளுவரால் இயற்றப்பட்ட இக்குறளே அன்பின் வலிமையை எடுத்துரைக்கவல்லது. அன்பு இல்லாதவர்கள் பிறருக்குப் பயன்படாமையால் முற்றும் தமக்கே உரியவர் ஆவர். அன்பு உடையோரின் என்பும் பிறர்க்குரியதாகும்.

நமது இரட்சகரான யேசுக் கிறீஸ்து பாவிகள் மீது அன்பு கொண்டுதானே இவ்வுலக மக்களை இரட்சிக்க மனிதனுய் அவதரித்து வந்தார். அவர் மக்கள்மீது கொண்டுள்ள அன்பினுல் தம் உயிரையே பலியாக்கச் சித்தமானுர். "அன்பு" என்னும் அரும் பண்புக்கு உலகத்திற்கே எடுத்துக்காட்டான யேசுக் கிறீஸ்துவை விட வேறு ஒரு சான்றும் உண்டோ? அன்பு நிறைந்தவர்களின் [illegible] போன்றது.

—எஸ்கலின் பானுந்து

## அர்ச். அந்தோனி கிளாறற்

அந்தோனி கிளாறற் என்பவர் ஸ்பானியாவிலே சலன்ற் எனுமிடத்தில் 1807-ம் ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகைக்குமுன் தினம் செனனமானுர். அவர் தமது இளம்பராயத்திலேயே நெசவுதொழிலிற் திறமைவாய்ந்தவராயும், வர்த்தக உலகில் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராயும் திகழ்ந்தார். ஆனுல், அவர்மேல் தேவ அழைத்தல் இறங்கவே அவர் உலக ஆடம்பர வாழ்வை அறவேதுறந்து, துறவற சீவியத்தை நடத்துமுகமாகக் குருமடத்திற் சேர்ந்து, ஞானச் சீவியத்தில் முதன்மை வாய்ந்தவரென்றும், கல்வித்துறையில் மேம்பட்டவரென்றும் தம்மைக் காண்பித்தருளினுர். அவர் தமது 28-ம் பராயத்தில் ஓர் குருவாகி ஊக்கமுள்ள ஒரு வேதபோதகராகவும், எழுத்தாளனுகவும், நிர்வாகியாகவும் விளங்கினுர். பல கிராமங்கட்கும், நகரங்கட்கும் சென்று நாளொன்றிற்குக் குறைந்தபட்சம் பன்னிரண்டு பிரசங்கங்கள் செய்துவந்தார். இரவின் ஓய்வுநேரங்களில் பற்பலவிதமான விஷயாம்சங்களைக் கொண்டுள்ள அநேக பெரிய நூல்களையும், சிறிய புத்தகங்களையும் எழுதினுர்.

தமது வேலையை இலகுவாக்குமாறு "மரியாயின் மாசற்றஇருதயத்தின் அப்போஸ்தலிக்க சபை"யை ஸ்தாபித்தார். வேறு அநேக சபைகளையும் ஸ்தாபித்து அவைகள்மூலம் பெண்பிள்ளைகளைப் பயிற்றுவித்தார். அவர் பிரசித்திபெற்ற கத்தோலிக்க சமயசாஸ்திர நிபுணராகவும் விளங்கினுர். 1350-இல் 11-ம் பத்திநாத பாப்பானவர் இவரைக் கியூபா தீவின் அதிமேற்றிராணியாராக நியமனஞ்செய்தார்.

தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட 6,00,000 நீகிருேவர்கள் மட்டில் தமக்குள்ள பொறுப்பை இவர் உணர்ந்து அன்பாக அவர்களை விசாரணை செய்துவந்தார். வறியவர்கட்கும், ஆன்மபலம் குன்றியவர்கட்கும் உதவிபுரிந்து, ஸ்பானிய அரசாங்கம் அங்கு செய்த அவசியமற்ற சட்டதிட்டங்களை நிராகரிப்பதில் வெற்றிகொண்டார்.

இவர் தமது முழு மேற்றிராசனத்திலும் தனிப்பட்டவகையில்சென்று திருத்தமுடியாத எத்தனையோபேர் இருந்தபோதிலும் கிராமந்தோறும் களையைப்பாராது நடந்தும், சிறு படகுகளில் பிரயாணம் செய்தும் தமது கடமைகளை மகிழ்ச்சியோடு செய்துவந்தார். இவ்விதமாக இவர் கடமையாற்றியகாலத்திலே 1,00,00 மக்களை மனம்திருப்பினுர். ஒழுங்கீனமான 9,000 குடும்பங்களைத் திருச்சபைமுறைப்படி மணம்செய்துவைத்தார்.

இவர் அங்கு சென்று ஏழுவருடங்களின்பின் 2-வது இசபெல்லா இராணியின் வேண்டுகோளின் பேரில் கியூபாதீவிலிருந்து மாற்றப்பட்டு அரச குடும்பத்தின் ஞான விசாரணைகாரராக அமர்த்தப்பட்டார். இவர் ஸ்பானியதேசம் சென்றபின் அந்நாடுமுழுவதும் அவரின் வேதபோதகநாடாக மாறியது. அவர் சென்றசென்ற இடங்களிலெல்லாம் இடையருது போதித்துவந்தார். கத்தோலிக்க காவியங்கள் எழுதுவதிலும், ஓவியங்கள் தீட்டுவதிலும் திறமை வாய்ந்தவர்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டிகளை ஏற்படுத்தி அவற்றிற்குத் துணையாகப் பயிற்சியளிக்கும் விசேஷ சங்கமொன்றை ஸ்தாபித்துச் சிறந்த கலைஞர்களையும், தேவையான நவீன உபகரணங்களையும் கொடுத்துதவினுர்.

சமீபத்திலே கருதினுல் மின்ட் சென்ரி ஆண்டவருக்கு ஏற்பட்டகதி ஒரு பெருங் குற்றச்சாட்டின் பேரில் இவருக்கும் ஏற்பட்டது. நாஸ்திகத்தை அழிப்பதற்கு இவர் உதவி செய்கிருர்என அறிந்தநாஸ்திகர்கள் இவரை எச்சரித்தனர்.

இதன்பின் கிளாறற் ஆண்டவர் பரிஸ்நகருக்கு அழைக்கப்பட்டு, அங்கிருந்தும் வத்திக்கான் ஆலோசனைச் சபையைக் கவனிக்கும் நோக்கமாக ரோமாபுரி சென்ருர். அங்கே இவர் பால்த்திமோரைச்சேர்ந்த கருதினுல் கிபன்ஸ் ஆண்டவரைச் சந்தித்தபோது அவர் இவரை "ஓர் உண்மையான அர்ச்சியசிட்டவர்" எனக் கூறினுர்.

ரோமாபுரியில் இருக்கும்போது இவர் ஒரு பயங்கர வியாதியினுல் பீடிக்கப்பட்டுக் கடின அவஸ்தைப்பட்டதின்பேரில் திரும்பவும் பிரான்ஸ் தேசத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஆனுல், மரணத்தறுவாயில் இருந்தும் இவர் தமது சத்துராதிகளிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காகப் புறேன்ற் புறேயிட்டிலுள்ள சிஸ்ரேர்ஷியன் சந்நியாசசபை மடத்தில் அடைக்கலம் புகுந்தார். கடைசியாக 1870-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 24-ந் திகதி அவருடைய ஆன்மா பரகதியை அடைந்தது. அவருடைய ஞாபகஸ்தூபியிலே "நான் அநீதியை வெறுத்து, நீதியை நேசித்தேன்; ஆகையால், நான் சமாதானமாக மரிக்கிறேன்" என்ற 7-ம் கிறகோரியாரின் வார்த்தைகள் பொறிக்கப்பட்டன.

கிளாறற் ஆண்டவர் சீவந்தராயிருந்தகாலத்திலே பலவிதமான சலுகைகளும் அவருக்குக் கிடைத்தன. தமது பேர்கொண்ட பதுவைப்பதியரான அர்ச். அந்தோனியாரைப்போல் இவரும் ஒருமுறை கிறிஸ்மஸ் பண்டிகைத் தினமன்று காலை தேவதாயாரிடமிருந்து பாலகயேசுவைப் பெற்றுக்கொண்டது போற் கண்டார்.

11-ம் பத்திநாத பாப்பானவர் இவரை மனந்தளராத உத்தம அப்போஸ்தலர் என்றும், திறமையான நிர்வாகஸ்தர் என்றும், உண்மையான கத்தோலிக்க சேவையாளர் என்றும் அடிக்கடி கூறியதோடு, 1934-ம் ஆண்டு மாசிமாதம் இவருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டமும் அளித்தார். பரிசுத்த வருடத்தின் மத்தியில் — அதாவது 1950-ம் ஆண்டு வைகாசிமாதம் 7-ந் திகதியன்றும் 12-ம் பத்திநாத பாப்பானவர் இவருக்கு அர்ச்சியசிட்டபட்டம் சூட்டினுர்.

உண்மையாகவே கிளாறற் ஆண்டவர் மகா பரிசுத்ததனமும், விவேகமுமுள்ள ஓர் அர்ச்சியசிட்டவர் மட்டுமன்றி, இக்கால மக்கட்கு ஒரு முன்மாதிரிகையான உத்தம அர்ச்சியசிட்டவராகவும் விளங்குகின்ருர்.



### புதிர்க் கணக்கு

ஒருவன் வியாபாரஞ் செய்யுமுகமாகப் பலரிடமிருந்தும் பழங்களை வாங்கினுன். பழங்களின் மொத்தத் தொகையை முறையே இரண்டால், மூன்ருல், நான்கால், ஐந்தால், ஆருல் வகுத்தால் ஒன்று மிஞ்சும். ஆனுல், ஏழால்வகுத்தால் சரியாகஅடங்கும். பழங்களின் தொகை என்ன?

S. R. அன்ரன் நவராஜா,
என்றியரசர் கல்லூரி,
இளவாலை.

### விடுகதைகள்

(1)

பிளந்த நாக்குடையவனும்
சர்ப்பமல்ல;
பேசாமல் பேசுவானும் ஞானியல்ல;
சுரும்பாலும், செம்பாலும்
கடித்துக் கக்கிக்
கற்றவர்க்கும், வர்த்தகர்க்கும்
தொண்டனுவான்.
இவன் யார்?

(2)

எழுந்து விழுந்து தாவிடும்,
இரவும் பகலும் இரைந்திடும்,
எண்ணில்லா உயிர்களை
இதமாய் வயிற்றில் அடுக்கிடும்,
கனத்தைக் கொடுத்தால்
விழுங்கிடும்,
கட்டையைக் கொடுத்தால்
உமிழ்ந்திடும்.
இது என்ன?

S. M. A. பிரான்சிஸ்,
கொழும்பு.

✳ கடைசியாக அர்ச்சியசிட்ட பட்டம் சூட்டப்பெற்ற ஆங்கிலேய அர்ச்சியசிட்டர்கள் அர்ச். தோமஸ் மோரும், அர்ச். ஜோண் பிஷர் கருதினுலும் என்பது ......

✳ பிறநாடுகளிலே வத்திக்கானின் பிரதிநிதிகளாய் — அதாவது அப்போஸ்தலிக்க 'நுன்ஸியோ'க்கள், அல்லது 'இன்ரர் நுன்ஸியோ'க்களாய் 42 பேர் இருந்துவருகிருர்கள் என்பது ......

நுன்ஸியோக்களும், இன்ரர் நுன்ஸியோக்களுமான பாப்பரசரின் பிரதிநிதிகள் யாரெனில், பல்வேறு நாடுகளிலும் பாப்பரசரின் பிரதிநிதிகளாக முறையே ஸ்தானிகர்களும், தூதுவர்களுமாயிருந்து இராசீய அந்தஸ்தை வகித்திருக்கின்ற கருதினுல்மார், அதிமேற்றிராணிமார்முதலாம் குருசிரேஷ்டர்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரிந்தவர் கூடினர்

[ இளைஞர்பக்கத் தொடர்ச்சி ]

புதல்வியின் வேண்டுகோளிற் கிணங்கியதையிட்டு எற்மன் சீற்றம்கொண்டார். எப்படியாகிலும் அன்புமொழி கூறி அல்லது கடுஞ்சொல் கூறியாவது அவளுடைய மனதை மாற்றிவிடவேண்டுமெனக் கங்கணங்கட்டினுர்.

[வளரும்]

## மாதோட்டத் தபால்

**— காட்டுத்தூதன் —**

ஐயா, "காவலன்" ஆசிரிய! சில வருட காலமாகத் "தூதன்" தங்கள் சீரியபத்திரிகையில் தோன்ருமையின் முக்கியகாரணம், அவன் இப்பகுதியில் நிலையாயிருந்து வசிக்கமுடியாமல் இருந்தமைதானும். ஆனல், இனிமேல் அவன் மத்தியதானமான குட்டிக்கிராமம் ஒன்றில் குடியேறிவிட்டதால் ஒழுங்காக விஷயதானஞ்செய்து வருவானென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்ருன்.

**உழவரின் உபகரணங்கள் :—**

இற்றைக்குச் சிலபல வருடங்களின் முன் கமக்காரர் தத்தம்நெல்வயல்களைப் பண்படுத்த மாடு, கலப்பை, நுகம், பலதிறப்பட்ட கயிறுகள் முதலிய உபகரணங்களைக் காலநேரத்துடனே தேடிக்கொள்வது பண்டைய முறையான ஒருவழக்கமாக இருந்தது. ஆனல் தற்போது சகலகிராமங்களிலும் இயந்திரக்கலப்பைகள் மலிந்துபொலிந்து காணப்படுவதால் மேற்சொன்ன உபகரணங்கள் அறவே தேவைப்படுவதில்லை. அதனல் எருதடிப்பார் ஓசைகளும், ஏர்உழுவார் ஓசைகளும் அற்றுப்போக அவற்றினிடமாக இயந்திரங்களின் பேரிரைச்சலே வானமட்டாய் எழுந்து பேராரவாரம் செய்கின்றது. இயந்திரங்களினல் விவசாயத்தொழில்விரைவிலே இலகுவாக நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

**கூட்டுறவுச் சங்கங்கள் :—**

ஆரம்பத்திலே விளைபொருள் வியாபார விருத்திச்சங்கங்களாகத் தோன்றிய எல்லாச் சங்கங்களும் சிலஆண்டுகளுக்கு முன்னர் தொடக்கம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களாக வேஷம் மாறிக் காட்சியளிக்கின்றன. பெயரளவில் மாறுவேடம் பூண்டபோதிலும் செயலளவில் எவ்வித நன்மையும் அவைகள் பயப்பனவாயில்லை. இதனல் சங்கச் சிப்பந்திகள் ஓரளவுக்குச் சுதந்திரம்பெற்று இருக்கின்றனரேயல்லாது ஏழைஉழவர்களுக்கு எவ்வித ஈடேற்றமும் ஏற்பட்டதாகக் கூறமுடியாது. அநேக சங்கங்களில் சர்வாதிகார முறையே தலையெடுத்திருப்பது வருந்தத்தக்கது.

**மின்சாரதீபம் :—**

மக்கள்செறிவு கூடிய கிராமங்களாகிய வங்காலை, பேசாலை முதலியகிராமங்களில் அங்கங்குள்ள கிராமச்சங்கங்களின் அயராமுயற்சியால் மின்சாரதீப நிலையங்கள்ஸ்தாபிக்கப்பட்டுமக்களுக்கு வெளிச்சவசதி அளிக்கப்பட்டிருப்பது பாராட்டத் தக்கதாகும். வங்காலையில் சமீபத்தில் மின்சாரதீப பாவனையைக் கட்டளைக்குரவர் வண. எவ். றெனே சுவாமியார்கள் ஆரம்பித்துவைத்தமை குறிப்பிடற்பாலதாகும். ஏனைய பெரிய சில கிராமச்சங்கங்களும் இவைகளைப் பின்பற்றிவெளிச்சவசதிகள் மட்டுமல்ல நல்ல குடிநீர் வசதிகளும் செய்துவைப்பது பொதுசனங்களுக்குச் சொல்லரும் நன்மைபயக்குமெனக் கூறவேண்டியதில்லை.

**இதுதான சுதந்திரம் :—**

நமது லங்காதுவீபம் சுதந்திரம் அடைந்ததினல் மக்களெல்லாம் மகிழ்ச்சியுடன் வாழலாமென மனப்பால் குடித்து வந்ததெல்லாம் வரவர மலடிமாடுபோல் ஆகிவருவதைச் சிந்திக்கும்

மட்டக்களப்புத்

## தாண்டவன்வெளித் தபால்

**ஊர்க்குருவியின் சுற்ருேட்டம்:**

அன்று புரட்டாதித்திங்கள் 24-ம் நாள் சனிவாரம் மங்களகரமாக விடிந்தது. நானும் என் இறக்கைகளை அடித்துக்கொண்டு உணவுதேடும்படலத்தைத் தொடக்கினேன். பலவிடங்களைச் சுற்றிப்பறந்தேன். எங்குமே இருக்கைகொள்ள என்மனம் மறுத்தது. ஒலிபெருக்கியொன்றின் இன்னிசைப்பாடல்கேட்டு விரைந்து தாண்டவன்வெளியூடே பறந்தேன். கிளென்னி ஆண்கள் கழகத்தின்மேல் தங்கினேன். ஆம், அங்கு கண்களுக்குக் குளிர்ச்சி, செவிக்குஇன்பம், மனதுக்கு மகிழ்ச்சிதரக்கூடிய நிகழ்ச்சிகள். அவற்றிலே மனதைப்பறிகொடுத்தே விட்டேன் எவ்வாறு? உணவுதேடினல் இன்சுவையளிக்கும் தீன்பண்டங்கள். தாகந்தணிக்கப் பானந்தேடினல் வர்ணங்கலந்த குளிர்பானங்கள். உல்லாசப் பொழுதுபோக்கில் ஈடுபடவிரும்பினல் ஓர்நவமான ஐஸ்கிறீம் நிலையம். எங்கள் அதிர்ஷ்டத்தைப் பரிசீலனை பண்ணுவதற்கேற்ற அநேகவகையான விளையாட்டுகள். இவைகளை விளையாடி மகிழ்வதிலே பாலர்முதல் கிழவர்கள் வரை ஆண்பெண் இருபாலாரும் கலந்துகொண்டனர். கத்தோலிக்க மக்களுக்குகந்த சமயானுசாரப் பொருட்களுக்கென ஓர்கடை. இல்லங்களுக்கு இதமளிக்க ஓர்மரக்கறிக்கடை. இன்னேரன்ன பல்வேறுநிகழ்ச்சிகள் ஒன்று சேர்ந்தால் அவ்விடத்தைவிட்டுப் பறக்கமனம்வருமா? எனவே, அன்று நான் எங்குமேபோகவில்லை. சனிவாரமன்று திருகோணமலை மேற்றிராசன ஐக்கிய சங்கதலைவர் திரு. யோசெவ் ஜே. டேவிற்அவர்களும், பாரியாரும் மாலைசூட்டி வரவேற்கப்பெற்றபின் இந்தநிகழ்ச்சிகளை ஆரம்பித்துவைத்துக் கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ.எல். வம்பேக்சுவாமிகளுடன் தாங்களும் கலந்து மகிழ்ந்தேகினர். மறுநாள் ஞாயிறுவாரம் 2-ம்பூசையின்பின் நகரசபைத்தலைவர் திரு. ஜே. எல். திசைவீரசிங்கம்அவர்களும், பாரியாரும் கட்டளைக்குரவர் அவர்களுடன் சேர்ந்து இவ்வைபவங்களைத் திறந்துவைத்துக் களிபேருவகை அடைந்தனர். அன்று பிற்பகல் 4மணிவரை மக்கள் இந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர். மிஷன்நாடுகளின்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கென இந்தவிற்பனை, விளையாட்டுகளால் சேர்ந்தபணம் அனுப்பிவைக்கப்படுமென அறிந்தேன். அதிகம்சித்திகரமாக இவற்றைச் செய்துமுடித்த பங்குக்கிறீஸ்தவர்கள், பக்திச்சபைகள், பாடசாலைகளுக்கும், ஆயவழிவகைகளைத் தெரிந்துஉதவிய கட்டளைக்குரவருக்கும், திறந்துவைத்துக் கலந்துமகிழ்ந்த பெரியார்களுக்கும் இந்தஊர்க்குருவியின் நன்றிஉரித்தாகுக.

— ஊர்க்குருவி.

போது மனம் புண்ணுகின்றது. பஸ் போக்குவரத்துடன் மதப் பாடசாலைகளையும் ஒரேவரிசையில் வைக்கப்பார்க்கின்றது இன்றைய அரசாங்கம். உண்மையான கடவுட்பக்திக்கு மதப் பாடசாலைகளே ஆணிவேரென்பதை எவரும் மறுக்கமுடியாது. உலகின் பலபாகங்களிலும் நிரீச்சுரவாதம் பெருக்கெடுத்துவரும் இக்காலத்தில் மதப்பாடசாலைகள் அழிந்துபோகுமானல் நமது தேடருஞ் செல்வங்களாகிய பிள்ளைகளின் வருங்கால நல்வாழ்வைப் பற்றிப் பேசவேண்டியதில்லை. இவ்விதமாக அரசாங்கம் மதப் பாடசாலைகளைக் கைப்பற்றமுயல்வது மக்களின் மதசுதந்திரத்தை வேருடன் பிடுங்குவதாகும். இதுதான சுதந்திர ஆட்சியின் சுகிர்தம்? சனநாயகஆட்சியின் சன்மானம்? சுபம்!

ஆசிரியர்களின்

## ஞானவொடுக்கம்

ஐப்பசிமாதம் 19-ந் திகதி புதன் கிழமை பின்னேரம் தொடக்கம் 23-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலைவரைக்கும் மருதமடுத் திருப்பதியில் ஆசிரியர்களுக்கு ஒரு ஞானவொடுக்கம் நடைபெறும்.

இம்முறை கொழும்புத்துறையில் ஞானவொடுக்கம் நடைபெறமாட்டாது.

எனவே, இந்த ஞானவொடுக்கத்தில் பங்குபற்றக்கூடிய ஆசிரியர்கள் எல்லோரும் பங்குபற்றுவார்களென எதிர்பார்க்கிறேன்.

இதில் பங்குபற்றவிருக்கும் ஆசிரியர்கள் கூடியசிக்கிரம் எனக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிலிப் பொன்னையா சுவாமி,
கத். பாட. பொதுமுகாமைக்காரர்.
யாழ்ப்பாணம் 27-9-60.

## ஐப்பசிமாதம்

**பொதுக்கருத்து:—** வேதகலாபனை வேளையில் பரிசுத்தகன்னிமரியாயின் மன்ருட்டினல் வெல்லமுடியாத மனவலியை விசுவாசிகள் அடையும்படியாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:—** வேதபோதகநாடுகளில் உபதேசிமார்களின் தொகையும், தரமும் உயரும்படியாக மன்ருடிக்கொள்வது.

### காலைக்காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதய ஆண்டவரின் கிருபையாலும் புதுமைப்பாலனின் புதுமையினலும் சதாசகாய மாதாவின் மன்ருட்டினலும் 10வருடமாகப் பிரிந்திருந்த எங்கள் குடும்பம் ஒற்றுமையானது. ஆகையினல்இதனை நன்றிஸ்துதியாகப் பிரசுரிக்கின்றேன்.

பள்ளிமுனை மாதாவின் ஊழியக்காரி

* * *

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதயராசாவின் இரக்கத்தாலும், பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், அர்ச். நீக்கொலாமுனீந்திரன், அர்ச். தெரேசம்மாள் இவர்களின் மன்ருட்டாலும் நான் கேட்டநன்மை கிடைக்கப்பெற்றேன். இவர்களின்நாமம் என்றும்புகழப்படுவதாக.

மிருசுவில் ஓர் அடியாள்.

* * *

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த சதாசகாயமாதாவின் சகாயத்தாலும், நாளுட்டான் திருப்பதியில் கிருபாசனம் கொண்டெழுந்தருளியிருக்கும் அர்ச்.ஆரோக்கியமாதாவின் அருளாலும், அர்ச். யூதா ததேயு, உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களின் ஆதரவாலும், என் சகோதரியும், பிள்ளையும் ஓராண்டு பூராவும் தங்களைப் பீடித்திருந்த கொடிய வியாதியினின்றும் விடுதலை பெற்றமைக்காக எனது நேர்த்தியின் பிரகாரம் இதைப்பிரசுரித்து ஏழையின் தாழ்மையான நன்றியைப் பரிசுத்த தேவதாய்க்குச் சமர்ப்பித்து, மேலும் இவர்கள்மீது தாயின் நிறைவான ஆசீரை இரந்து நிற்கின்றேன்.

தேவதாயின் அடியாள்
யாதகல் ஏ. எல். நாயகி

## கருதினல் ஆண்டகையவர்கள் நிகழ்த்திய உரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செயிக்கமுடியாத நாட்டுப்பற்றை உருவாக்குவதையே கருதுகின்றன. இந்தப்பற்றே ஒருநாட்டின் மகிமை பெருமையும், ஏனையவைகளுக்கு ஒரு மேலவரிச்சட்டமுமாய் இருந்துவரும். ஏற்கனவே நெடுங்காலமாய்க் கண்ணியமாகமதிக்கப்பெற்ற ஒருநாமமாகிய இலங்கைமீது சுதந்திரஉலகின்கண்கள் இருக்கின்றன. எல்லர்நாடுகளிலுமே நன்மனம்படைத்த மனிதரெல்லாம் இங்கேமனிதனுக்கு அளிக்கப்படும் மதிப்பை கண்டுகொள்ளக் கண்ணேட்டமாயிருக்கின்ருர்கள். சுதந்திரப்பற்றுனது மானிடசமுதாயம் அதிகம் சிறந்தநிலையில் இருக்கிறதென்பதின் அறிகுறியாகும். இந்நாட்டின் எதிர்காலம நன்மையானதாய் இருக்குமென்று நாம்அறிவோம். ஏனெனில், இதன் அனுகூலத்துக்கென்று அர்ப்பணஞ்செய்யப்பெற்ற பற்றுதலுள்ள இருதயங்களை நம்மைச்சூழவரக் காண்கிருேம். தேவனைநேசிக்கிற மனிதர் இலங்கையை நேசிக்கிறமனிதராவர்

ஆகவே,உங்கள் அழகானதுவீபத்திலும், அதன் தீரமுள்ளமக்களிலும் உலகம்கொண்டுள்ள நம்பிக்கைக்குப் பிரமாணிக்கமாயிருங்கள். உங்கள் குடும்பவாழ்க்கையை — உங்கள்பிள்ளைகள்மட்டிலுள்ள உங்கள்பற்றுதலை— அவர்களுடைய கல்வியைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். உங்கள்சமூகத்தின் வாழ்க்கையை உயர்த்துவதாகிய குடியியல்கடமை ஒவ்வொன்றையும் அனுட்டித்துவாருங்கள். சுதந்திரத்தை நேசியுங்கள். அதற்காகப் பணியாற்ற விருப்பங்கொள்ளுங்கள். ஏனெனில், சுதந்திரமின்றேல் மனிதன் தாழ்வடைவான். பொதுநலனுக்கும், பொதுசனநல்வாழ்விற்குமாக நடைபெறுகின்ற ஒவ்வொருமுயற்சியிலும் உங்கள் உடன்பிரசைகளுடன் ஒன்றுபட்டுஉழையுங்கள். இறுதியாக, தேவனை-உங்கள்திருவேதத்தை நேசியுங்கள். அதனல் எல்லாம்வல்ல இறைவனின் ஆசீர்வாதங்கள் உங்கள்மேலும், இலங்கையாகிய உங்கள்அன்பான நாட்டின்மேலும் பின்னரும் தொடர்ந்து இறங்கிக்கொண்டிருக்கும்.

● அசீஸிப்பதியரான அர்ச். பிரான்சீஸ்குவின் புனிதவாழ்க்கையை அடிப்படையாகக்கொண்டு நிகழும் ஐப்பசி மாதத்திலே சினிமாப்படம்ஒன்றைத் தயாரிக்கும் வேலை ஆரம்பமாகவிருக்கிறது. இது அசீஸி, பெறூஜியா, சீயென்ன, பொஸாஞேவா, ரூேமாபுரி முதலாம் இடங்களிலே படம்பிடிக்கப்படும்.

● இந்தியாவிலே தலைசிறந்த பொறியியல் வல்லுனரும், அரசியல்வாதியுமான டக்றர் விஸ்வேஸ்வரய்யாவின் 100-வது பிறந்தபெருநாள் சென்ற புரட்டாசிமாதம் 15-ந்திகதி பங்களூரில் கொண்டாடப் படலாயிற்று. "கடினஉழைப்பு, மனநிறைவு, உளமகிழ்ச்சி, திறந்தவெளியில் வாசம்" என்பனவே தமதுநீடியஆயுளின் இரகசியமென்று அவர் தெரிவித்திருக்கிருராம்.

● ஐக்கியஅமெரிக்கதேசபிலடெல்பியாநகர் அதிமேற்றிராணியாராயிருந்து அன்று ஞாயிற்றுக்கிழமை தமது 72-ம்வயதிலே காலஞ்சென்ற கருதினல் ஓ'ஹரா ஆண்டவர்23-ம் அருளப்ப பாப்பரசராலே முதல்முதலாகக் கருதினல்பதவிக்கு உயர்த்தப்பெற்றவர்களில் ஒருவராவர். இவரின் மரணமானது திருச்சபைக் கருதினல்மாரின் தொகையை 83பேராகக் குறைத்துவிட்டிருக்கிறது.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, October 6-1960.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org